பக்கங்கள்: 11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 24 வியாழக்கிழமை 09.09.2021 கதிர் 308

இனி இது ரகசியம் அல்ல!

இலங்கையில் இருந்து குறிப்பாக – தமிழர் தரப்பில் இருந்து – வருகின்ற கடிதங்களை தரவாரியாகப் பிரித்து, உரிய பரிந்துரைகள் மற்றும் விளங்கங்களுடன் தமக்குத் தருவதற்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சலெட் பக்கம்02

# உண்மைகளை மூடிமறைத்து சர்வதேசத்தையும் பாப்பரசரையும் ஏமாற்ற முயற்சிக்கின்றது அரசு

## பேராயர் குற்றச்சாட்டு; ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி வேண்டும் எனவும் வலியுறுத்து

"அரசு, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான உண்மைகளை மூடிமறைத்து, சர்வதேசத்தையும் பாப்பரசரையும் ஏமாற்ற முயற்சிக்கின்றது."

– இவ்வாறு கொழும்பு பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் இத்தாலிக்கான உத்தியோகபூர்வ பயணத்தின்போது பாப்பரசரைச் சந்திக்கவுள்ளனர் என்று வெளியான செய்தியைத் தொடர்ந்தே, பேராயர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக அரசு சர்வதேசத்துக்குச் செல்வதானால், நாமும் சர்வதேசத்துக்கு எமது நிலைப்பாட்டை அறிவிப்போம்.

அரசு உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான உண்மைகளை மூடி மறைத்து, சர்வதேசத்தையும் 10



# பேராயர் வத்திக்கானுக்கு அழுத்தம்; பாப்பரசர் – மஹிந்த சந்திப்பு இரத்து

## வெளிவிவகார அமைச்சு சமாளிப்பு அறிக்கை

இத்தாலிக்கு அடுத்த வாரம் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அங்கு வத்திக்கானில் புனித பாப்பரசரை சந்திக்கமாட்டார் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

முன்னதாக பிரதமர் மஹிந்த அங்கு பாப்பரசரைச் சந்திக்கவுள்ளார் என்று செய்திகள் வெளிவந்த பின்னர், கொழும்பு பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை உட்பட்டோர் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் நீதியான விசாரணைகள் நடக்காமல் சர்வதேசத்துக்கு அரசு தவறான விடயங்களைக் கூறலாம் என்று பேராயர் தெரிவித்தார். 10



## 2,915 பேருக்கு நேற்று தொற்று

இலங்கையில் நேற்று 2 ஆயிரத்து 915 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் 2

## யாழில் நேற்று நால்வர் மரணம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேலும் 4 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளனர்.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பருத்தித்துறையைச் 2

## நாமல் இன்று யாழ்.வருகை



(இ.கலையமுதன்)

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் 2

## மேலும் 185 பேர் சாவு மொத்தக் காவு 10,689

இலங்கையில் மேலும் 185 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பலியாகியுள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

இதன்படி நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 10 ஆயிரத்து 689 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 185 பேரில் 83 பெண்களும், 102 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குடாநாட்டில் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறையவில்லை

### மாவட்ட அரச அதிபர் எச்சரிக்கை



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்று நிலைமை சரியான முறையில் குறைந்த பாடாக இல்லை. கடந்த சில நாள்களில் குறைந்து செல்லும் போக்கைக் காட்டியது. 10

## சாந்தசோலை கிராமம் அபாயகரமான கட்டம்!

### 43 பேருக்குத் தொற்று

(வவுனியா நிருபர்)

வவுனியா, சாந்தசோலை கிராமம் கொரோனாத் தொற்று காரணமாக அபாய நிலையை அடைந்துள்ளதுடன் கிராமத்தில் 43 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் 2

## வடக்கு மாகாணத்தில் உடனடியாக மேலும் 6 மின் தகன மயானங்கள்!

### உள்ளூராட்சி ஆணையாளர் அனுமதி

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாணத்தில் உடனடியாக மேலும் 6 மின் தகன மயானங்கள் அமைப்பதற்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் நேற்று அனுமதி வழங்கியுள்ளார்.

வடக்கில் கொரோனாவின் காரணமாக மரணங்கள் அதிகரித்துள்ள நிலையில் வடக்கு மாகாணத்தில் இடம்பெறும் நெருக்கடிகள் தொடர்பில் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் 2

## உடுப்பிட்டியில் 2 தரப்பினரிடையே மோதல்; கிராமத்தை முற்றுகையிட்டது இராணுவம்!

(எஸ்.நிதர்ஷன்)

வடமராட்சி, செப்ரெம்பர் 09

யாழ்.,வடமராட்சி, உடுப்பிட்டியில் கிராமத்தில் இரண்டு பகுதியினருக்கு இடையே இடம்பெற்று வந்த மோதல் ஊர்ப் பிரச்சினையாக மாறியதையடுத்து பொலிஸாரால் கோரப்பட்டதற்கமைய நேற்றிரவு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதனால் அந்தக் கிராமத்தில் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.

உடுப்பிட்டி இலகடி மற்றும் வன்னிச்சி அம்மன் கோவில் வேலிந்த தோட்டம் பகுதியைச் சேர்ந்த இருதரப்பினர் இடையே இடம்பெற்று வந்த மோதல் கடந்த சிலநாள்களாக ஊர்ப்பிரச்சினையாக மாறியது.

இந்த மோதலில் சிலர் தலைமறைவாகிய நிலையில் வல்வெட்டித்துறைப் பொலிஸாரின் அழைப்பின் பேரின் நேற்றிரவு இராணுவத்தினர் சுற்றிவளைத்துப் பாதுகாப்பு வழங்கியுள்ளனர். அதனால் அந்தக் கிராமத்தில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

## வவுனியாவில் 123 பேருக்கு கொரோனா

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் மேலும் 123 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங் 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அம்மையார் தமது அலுவலகத்துக்குள் தனியான பிரிவொன்றை இனி ஆரம்பிக்க வேண்டியிருக்கும் போல. இலங்கையில் இருந்து போகும் கடிதங்களின் சீத்துவம் அப்படி. எல்லாம் எங்கள் தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமையின் மகாத்மியம்.

தமிழ்க் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் இரண்டு – ரெலோவும் புளொட்டும் – கூட்டமைப்புக்கு வெளியில் நிற்கும் சுரேஷ் – விக்கி – ஸ்ரீகாந்தா அணியுடன் சேர்ந்து ஒரு கடிதத்தை அனுப்ப, அதே சமயம் கூட்டமைப்பில் மிஞ்சியிருக்கும் தமிழரசை மட்டும் வைத்துக் கொண்டு, தாமேதான் இன்னும் கூட்டமைப்பின் தலைவர் என்ற கோதாவில் மடல் அம்பு விடுகின்றார் சம்பந்தன்.

அதேசமயம், இலங்கைத் தமிழரசின் அதிருப்தி அணி ஒன்று மூன்றாவது தரப்பாக ஒரு கடிதத்தை அனுப்புகின்றது என்று ஓர் ஊடகம் செய்தி வெளியிட சம்பந்தப்பட்ட தரப்புகள் ஒரேயடியாக மறுத்து அந்த ஊடகத்தை நட்டாற்றில் விட்டு விட்டன. ஆனாலும் சம்பந்தப்பட்டோரில் ஒரு சிலருடைய கையெழுத்துடனாவது – சில சமயங்களில் முழுப் பேரினதும் ஒப்பத்துடன் – தயாரான அக்கடிதத்தின் பிரதி ஒன்று அந்த ஊடகத்திடம் இருப்பதாக நம்பகமாக அறிய வந்தது. அரசியல்வாதிகள் தங்கள் திருகுதாளங்களை முன்னெடுத்து விட்டு, இடைவழியில் தங்கள் நிலையைக் காப்பாற்றிக்கொள்வதற்காக அந்த ஊடகத்தையே கைவிட்டு விட்டனர் என்று தகவல். பாவம் அந்த ஊடகம், விழுங்குவதா, துப்புவதா என்று தெரியாமல் தடுமாறுவதாகக் கூறப்படுகின்றது.

அந்தக் கடிதத்தில் கடைசியாக ஒப்பமிட்டு விட்டு, அதில் பிரதி எடுத்து அந்த ஊடகத்துக்கு அனுப்பிய ஊடகப் பிரதிநிதி ஒருவர் திடீரென ஏனையோருடன் சேர்ந்து பம்மிக் கொண்டு விட்டாராம். கடிதம் அனுப்பும் விடயத்தில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோவும் புளொட்டும் கடும் காட்டத்துக்குள்ளாகியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் தங்கள் பெயரைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது என்பதற்காகத்தான் அதிருப்தி அணி இதில் பின்வாங்கியிருக்கின்றது. தமிழரசுத் தலைமையிடம் ஒற்றுமை புராணம் பாடியிருக்கின்றது.

ஆனால், இந்த விடயத்தில் நெருப்பில்லாமல் புகையில்லை என்பது மட்டும் உறுதி. ஆனாலும் புகை அடங்கி விட்டமையால் விவகாரம் அடங்கி விட்டது என்றும் அர்த்தமல்ல. அது மீண்டும் நல்ல காற்று வீசுமானால் கொழுந்த விட்டெரிந்து வெளிப்படலாம்.

தமிழரசுப் பக்கத்தில்தான் கடித விவகாரம் சிக்கல் என்று இல்லை. புளொட் – ரெலோ – விக்கி கட்சி – சுரேஷ் கட்சி – ஸ்ரீகாந்தா கட்சி எல்லாம் ஒன்று சேர்ந்து ஒப்பமிட்டுக் கடிதம் அனுப்பினாலும் அங்கும் உள்வீட்டு வில்லங்களுக்குப் பஞ்சமில்லை என்றுதான் தோன்றுகின்றது.

சிவாஜிலிங்கமும் அனந்தியும் அந்தக் கடிதத்துக்கு உடன்படாமல் கெம்பிக் கொண்டு நிற்கின்றார்கள் என்று கேள்வி.

தமிழர்களை தனியான இனத்துவக் கூட்டம் என்று குறிப்பிடும் சொல்லாடலுக்கு Peoples என்று சொல் லாமல் வெறு சமூகம் என்று குறிப்பிட்டமையால், அந்தக் கடிதத்தில் சிவாஜி – அனந்திக்கு உடன்பாடு இல்லையாம். அதனால் அந்தக் குழு இன்னும் சிலருடன் சேர்ந்து புதிய கடிதம் ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு எழுத விருக்கின்றன என்று தகவல். எல்லாம் புலம்பெயர் பின் புலங்களின் திருகுதாளம். (பணத்தால்) ஆட்டுவித்தால் ஆடாதார் யாரோ?

இதேசமயம், யாழ்.மாவட்ட எம்.பி. நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வன் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு மற்றொரு அவசர கடிதத்தை நேற்று அனுப்பி வைத்திருக்கின்றார்.

இன்னும் ஐந்து நாள்களில் ஜெனிவாவில் தொடங்கவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடரில் இலங்கை விடயம் எடுக்கப்படவிருக்கையில், அதையொட்டி இங்குள்ள தூதரங்களுக்கு விளக்க அறிக்கை ஒன்றை இலங்கை வெளிவிவகார அமைச்சு அனுப்பியுள்ளது.

அதில் சர்வதேச சமூகத்தைக் குழப்பும் விதத்தில் தவறான – முற்றிலும் பொய்யும் புரட்டுமான – தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்து, அவற்றை அம்பலப்படுத்தும் விதத்தில் இந்த அவரசக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ள பல தகவல்கள் தொடர்பில் அதில் சவால் விடுத்திருக்கின்றார் நீதியரசர் விக்னேஸ்வரன்.

இதற்கிடையில் கொழும்பு ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதில் என்ற அறிக்கை ஒன்றையும் ஆங்கிலத்தில் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்திருக்கின்றார் அவர்.

கூட்டமைப்பில் இருந்த கட்சிகள் தனித்து முடிவெடுத்து வந்து, ஜெனிவாவுக்கு அனுப்பப்படும் கடிதத்தில் தங்களுடன் சேர்ந்து ஒப்பமிட்டமையை அதில் வரவேற்றுள்ள அவர், இப்படி கூட்டமைப்புக் கட்சிகள் துருவ மயப்பட்டுச் செல்வதையும் சிலாகித்துள்ளார்.

நல்லது. அப்படியே துருவ மயப்படட்டும். ஆனால் விரைவில் தமிழர் தரப்புடன் பேச்சு என்ற அடிப்படையில் சம்பந்தனுக்கு அழைப்பு அனுப்பப்போகின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. அதே வேளை பிரதமர் மோடியுடன் பேச்சுக்கும் சம்பந்தன் – சுமந்திரன் – மாவைக்கு விரைவில் அழைப்பு புதுடில்லியிலிருந்து வரும் எனக் கூறப்படுகின்றது.

அப்படி, வந்தால், என்ன முகத்தோடு புளொட், ரெலோ தலைவர்கள் வந்து சுமந்திரனில் ‘கோர்ட்’டில் தொங்கப் போகின்றார்கள்? அல்லது நீதியரசரின் உத்தரியத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டு சுரேஷுடனும், ஸ்ரீகாந்தாவுடனும் அந்தப் பக்கம் நிற்பார்களா?

நீதியரசர் வரவேற்கும் துருவமயப்படுத்தல் ரெலோவையும் புளொட்டையும் ஜனநாயகப் பிரதிநிதித்துவத்தில் இருந்து இல்லாதாக்கும் சதி. நேற்று சி.வீ.கே. பாவித்த வாசகத்தில் கூறுவதானால் “ஸேம் சைட் கோல்...!’

இன்னொரு சொசுறு விடயமும் உண்டு. சில கட்சிகள், முன்னாள் இயக்கங்கள் என்பன மேற்படி தருஸ்மன் அறிக்கையை எதிர்க்கின்றன எனவும், அந்த அறிக்கையின் அடிப்படையில் நீதி விசாரணை மற்றும் பொறுப்புக் கூறலை நிலைநாட்டக் கோரும் சம்பந்தன் – சுமா இணையைத் தாங்கள் சாடுகின்றன என்று குறிப்பிட்டு சீறுகின்றன.

வெளிநாட்டில் இருந்து தொலைபேசி அழைப்பு எடுத்த நண்பர் ஒருவர் இந்தச் சீற்றம் ஏன் தெரியுமா என்று கேட்டார். நான் தெரியவில்லை என்றேன்.

தருஸ்மன் அறிக்கையில், அரசுப் படைகள் மற்றும் புலிகள் தரப்பு ஆகியன இழைத்த யுத்தக் குற்றங்கள், மனிதாபிமானமற்ற செயல்கள், அடிப்படை உரிமை மீறல்கள் ஆகியவை பற்றி மட்டும் விசாரிக்கக் கேட்கப்படவில்லை. ஒட்டுக்குழுக்கள் இழைத்த கொடூரங்கள் குறித்தும் விசாரிக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளதாம். அதனால்தான் அந்த அறிக்கைக்கு எதிராக இத்துணை துள்ளிக்குதிப்புகள் என்றார் என் நண்பர்.

நான், “அப்படியா? தருஸ்மன் அறிக்கையைத் தேடிப் பிடித்துப் பார்க்கிறேன்.” – என்று கூறித் தொலைபேசி அழைப்பைத் துண்டித்தேன்.

அப்படி என்றால் சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை. விடயம் விளங்கித்தான் ஆடுகின்றது, விசாரணை விவகாரம் தங்களுக்கு எதிராகவும் திரும்பி விடும் என்ற பயத்தில்தான் இவ்வளவு அழிச்சாட்டியமும் என்று தோன்றுகின்றது.

– மின்னல்–

## 2, 915 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 74 ஆயிரத்து 778 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,691 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 89 ஆயிரத்து 969 ஆக உயர்வடைந்துள்ளது.

## யாழில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்ந்த 85 வயதுடைய ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற கைதடி முதியோர் இல்லத்தைச் சேர்ந்த 81வயதுடைய ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற கோண்டாவிலைச் சேர்ந்த 69 வயதுடைய ஆண் ஒருவரும், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 66 வயதுடைய பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

## சாந்தசோலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்துள்ளனர்.

வவுனியா, சாந்தசோலை கிராமத்தில் கொரோனாத் தொற்று அபாயம் இருக்கின்றது எனக் கிராமத்தின் பொது அமைப்புக்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக சுகாதாரப் பிரிவினரால் கடந்த சனிக்கிழமை சாந்தசோலை கிராமத்தில் அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன்படி, நோய் அறிகுறி காணப்பட்டவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 12 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது. மேலதிகமாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகள் நேற்றிரவு வெளியாகின. அதில் 31பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன்படி குறித்த கிராமத்தில் 43 பேர் கோவிட் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

கொரோனா அபாயமுள்ள கிராமாக குறித்த கிராமம் காணப்படுவதால் பொது மக்கள் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர்.

## நாமல் இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாமல் ராஜபக்ஷ இன்று யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான கண்காணிப்புப் பயணம் மேற்கொள்கின்றார்.

நாமல் ராஜபக்ஷ அபிவிருத்திக் கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சராக மேலதிக பொறுப்பேற்றுள்ள நிலையில், அரசின் அனுசரணையில் யாழில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களை நேரில் கண்காணித்து அவற்றைத் துரிதப்படுத்தும் நோக்கிலேயே அவரது யாழ். விஜயம் அமைகின்றது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள நிலையில், அமைச்சரின் வருகையை முன்னிட்டு எவ்வித விசேட நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்படவில்லை என்று அவரின் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று நெருக்கடிகளுக்கு மத்தியிலும் நாடளாவிய ரீதியிலான அபிவிருத்திச் செயற்பாடுகளை அரசு தடையின்றி முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது என்றும் அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## வடக்கு மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

டிரஞ்சன் தலைமையில் நேற்று அவசரமாக ஆராயப்பட்டது.

இதன்போது தற்போது யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் மட்டுமே மின் தகனமயானங்கள் உள்ள நிலையில், வடக்கில் தினமும் இடம்பெறும் மரணங்களின் எண்ணிக்கைக்கு ஈடுகொடுக்க முடியாமல் உள்ளதால் அவசரமாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டன.

இதன்போதே இந்த விடயத்துக்குத் தீர்வாக மாகாணத்தில் மேலும் 6 மின் தகன மேடைகளை அமைக்க 6 சபைகளுக்கு அனுமதி வழங்கியபோதும் நிதி வல்லமை மற்றும் திட்ட விருப்பம் இருந்தால் இந்த 6 சபைகள் பணியை உடன் முன்னெடுக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு, நல்லூர் ஆகிய 3 பிரதேச சபைகளுக்கும், சாவகச்சேரி நகர சபைக்கும் அனுமதி வழங்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச சபைக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைத்துரைப்பற்று பிரதேச சபைக்கும், மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபைக்கும் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில நேற்றிரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 123 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப் படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (100)



# நாட்டுக்குள் மற்றொரு திரிவு வருவதற்கு வாய்ப்புள்ளது

## இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி எச்சரிக்கை



அமுல்படுத்தப்பட்ட பயணக்கட்டுப்பாடுகளின் மூலம் கொரோனா திரிவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தாலும், மற்றொரு திரிவு நாட்டுக்குள் வருவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன என ஆரம்ப சுகாதார இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

இந்நிலையில், மக்கள் கொரோனாவுடன் வாழப் பழகிக்கொள்ள வேண்டும் என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்ணான்டோ புள்ளே வலியுறுத்தினார்.

அத்துடன் இந்தச் சந்தர்ப்பத்தில் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டுகின்றமையை விடுத்து, அரசியல் பேதங்களை மறந்து நாட்டையும் மக்களையும் காப்பாற்றுவதற்காக ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்தார்.

# ஆற்றுப்படுகையில் மீண்டும் தீ பரவல்!

## சம்மாந்துறை - சவளக்கடையில் சம்பவம்



சம்மாந்துறை – சவளக்கடை பொலிஸ் எல்லைப் பகுதிகளில் உள்ள நாணல் காடுகள் கடந்த 3 தினங்களாக எரிந்து சாம்பலாகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆற்றுப்படுகையில் மீண்டும் கடந்த காலங்களில் ஏற்பட்டதை போன்று தீ விபத்து ஏற்பட்டதில் நாணல் மூங்கில் சருகு எரிந்து நாசமாகி வருகின்றன.

இதனால் குறித்த பகுதியை சூழவுள்ள சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை, மருதமுனை, பெரியநீலாவணை பகுதிகளில் எரிந்த நாணல் கீற்றின் சாம்பல் துகள்கள் விழுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் தீ கொளுந்துவிட்டு எரிந்ததால், ஏராளமான மூங்கில் தட்டு நாணல் உள்ளிட்டவை எரிந்து சாம்பரலாகியுள்ளன.

மேலும் அருகே எவ்வித குடியிருப்புகளும் இல்லாதமையால் எவ்வித உயிர் சேதமோ பொருள்சேதமோ ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அதிகமான பறவைக் குஞ்சுகள் இறந்துள்ளமையுடன், பாரிய பறவைகள் இதனால் இடம்பெயர்ந்துள்ளன.

கடந்த 3 தினங்களாக இப்பகுதியில் வீசுகின்ற கடும் காற்றால் குறித்த நாணல் காடுகள் உராய்விற்குட்பட்டு எரிந்திருக்கலாம் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அதேநேரம், சில இனந்தெரியாதவர்களால் பறவை மிருக வேட்டைக்காகவும் குறித்த நாணல் காடுகள் எரிக்கப்பட்டுள்ளன எனக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மேலும் அப்பகுதியில் உள்ள கிட்டங்கி ஆற்றின் மருங்கிலும் இவ்வாறான மூங்கில் சருகு நாணல்கள் காய்ந்து காணப்படுகின்றமையுடன், கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இப்பகுதியில் திடீரென தீ விபத்து ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஊரடங்கு உத்தரவை மீறிப் பயணித்த சகோதரர்கள் மீது பொலிஸ் தாக்குதல்

## வவுணதீவில் சம்பவம்

மட்டக்களப்பு – வவுணதீவு பகுதியில் ஊரடங்கு உத்தரவை மீறி பயணித்த சகோதரர்கள் மீது வவுணதீவு பொலிஸாரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாண்டியடி எரிபொருள் நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மோட்டார்சைக்கிளுக்கு எரிபொருள் நிரப்பிவிட்டு வீடுதிரும்பிய இரு சகோதரர்கள் மீதே இவ் வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதா கத் தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் வாகனத்தை நிறுத்தி பொலிஸ் அதிகாரியொருவர் துப்பாக்கியால் அவர்கள் மீது சரமாரியாக தாக்குதல் நடத்தினார் எனக் கூறப்படுகிறது.

காயமடைந்த இருவரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், கண் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தபட்டுள்ளனர் எனவும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

# 'அத்தியாவசிய சேவை' என பெயரிடப்பட்ட லொறியில் உரம் கடத்திய இருவர் கைது



எம்பலப்பிட்டியில் இருந்து அம்பாறை நிந்தவூர் பிரதேசத்துக்கு 350 உரைப்பை மூடைகள் கொண்ட உரத்தை கடத்திச் சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை விசேட புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை சந்தேகநபர்களை அம்பாறை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் கைது செய்து ஒப்படைத்துள்ளனர் என சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

'அத்தியாவசிய சேவைகள்' என்ற பெயர் பலகை ஒட்டப்பட்ட லொறியிலேயே உர மூடைகள் கடத்தப்பட்டுள்ளன.

மேலும் அதில் சட்டவிரோதமாக தலா 50 கிலோ கிராம் கொண்ட 350 உரப்பை மூடைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமையுடன், லொறியையும் அம்பாறை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.


# யாழ்ப்பாணம் மாநகர சபை

## விளம்பர ஒலிபரப்புச் சேவைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகரசபையினால் 03.07.2021 ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கும் கீழ் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கும் அமைய இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள விளம்பரசேவைகள் 01.10.2021 திகதி முதல் 30.09.2022 ஆம் திகதி வரையான ஒருவருட காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் பெறுகைக் குழு யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

**கேள்விப்படிவக் கட்டணம்** :- 1,000.00
**கேள்விப்படிவம் விநியோகித்தல்** :- 10.09.2021 - 23.09.2021
**கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல்** :- 24.09.2021 மு.ப 10.00 மணி
**கேள்வி மூடுதல் / திறத்தல்** :- 24.09.2021 மு.ப 10.00 மணி

| இல | கேள்வி அடையாள இலக்கம் | ஒலிபரப்பு விபரம் | மதிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ரூபா மில்லியன்) | ஒப்பந்த காலம் | மீளளிக்கப்படாத தொகை ரூபா | கேள்வி பிணை முறி விபரம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தொகை ரூபா | செலுத்தியிருக்கும் காலம் |
| 1. | MC/ N.M.B/F-08/B.01/2021 | நவீன சந்தை கட்டிடத் தொகுதி மேல்மாடி | 1 மில்லியன் (1,000,000.00) | 1 வருடம் | 1,000.00 | 20,000.00 | 09.12. 2021 |
| 2. | MC/S.M/F-08/B.02/2021 | செங்குந்தா சந்தைத் தொகுதியில் – மீன்சந்தைக்கு மேல் | 0.35 மில்லியன் (350,000.00) | 1 வருடம் | 1,000.00 | 7,000.00 | 09.12. 2021 |

மேலதிக தகவல்களை நானாவித இறைவரிப் பகுதியுடன் தொலைபேசி இலக்கம் 0212215978 தொடர்புகொண்டு அல்லது அலுவலக நாள்களில் மு.ப 9.00 மணி முதல் - பி.ப 3.00 மணிவரை நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
பெறுகைக்குழு,
மாநகரசபை யாழ்ப்பாணம்.


# வலம்புரி சங்குகள், முத்து வைத்திருந்த ஒருவர் கைது

ரிதிகம பொலிஸ் பிரிவில் ரம்படகல்ல பிரதேசத்தில் விசேட அதிரடிப்படையின் குருணாகலை முகாமினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இரு வலம்புரி சங்குகள் மற்றும் முத்து ஒன்று என்பவற்றுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 40 வயதுடைய ரிதிகம பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

இது தொடர்பில் ரிதிகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# இந்திய இராணுவக் குழுவினர் இலங்கைக்குத் திடீர் பயணம்

இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு பற்றிய பேச்சு நடத்துவதற்காக இந்திய இராணுவத்தின் பிரதிநிதிகள் குழு இலங்கைக்குத் திடீர் விஜயம் மேற்கொண்டுள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர்தூதரகம் விடுத்துள்ள டுவிட்டர் செய்தியில் இந்த விடயம் கூறப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு ரீதியிலான பேச்சு, பயிற்சி முகாம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு பற்றிய விடயங்களுக்காக இந்தக் குழு விஜயம் செய்திருக்கின்றது எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மீள ஏமாறப்போகும் சம்பந்தன்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தன், தலைவர் மாவை சேனாதிராசா ஆகிய இருவரும் கட்சியில் மிக மூத்த உறுப்பினர்கள். அவர்கள் இருவருக்கும் முன்னாள் முக்கிய கேள்வி ஒன்று வைக்கப்பட்டிருக்கின்றது. தீர்மானம் எடுக்க வேண்டியவர்கள் – எடுக்கப் போகின்றனவர்கள் – அவர்கள்.

ஆனால், விளைவை எதிர்கொள்ளப் போகின்றவர்கள் தமிழரசுக் கட்சியினரும், தமிழ்ப் பொதுமக்களும்.

அது பற்றி எல்லாம் அந்த இருவருக்கும் கவலை, சிந்தனை, சிரத்தை இருக்குமா என்பது கேள்விக்குறியே.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அடுத்த மட்டத் தலைவர்களில் தொடங்கி அடிமட்டத் தொண்டர் வரை அனைவரினதும் கருத்து யாது என்பதை இருவரும் கவனத்தில் எடுப்பது முக்கியம்.

தாங்கள் வழி நடத்திச் செல்வது, தந்தை செல்வா ஸ்தாபித்த பாரம்பரியக் கட்சி என்ற முறையில் அதன் அடி மட்டத் தொண்டர்களின் கருத்தைக் கவனத்தில் எடுத்துச் செயற்பட வேண்டிய தார் மீகக் கடமையும், பொறுப்பும் சம்பந்தனுக்கும், மாவைக்கு உண்டு என்பது மறுக்கக் கூடியதல்ல.

அதேநேரம், தன் மக்களுக்கு, தன் கட்சியினருக்கு, தன் தொண்டனுக்கு எது அவசியம் என்று தீர்மானித்து, அதன் வழியில் அவனை நடத்தும் பெரும்பொறுப்பும் கட்சித் தலைவருக்கு – தலைவர்களுக்கு – உண்டு என்று நம்புகின்றோம்.

அப்படி மக்களும் கட்சியின் அடிமட்டத் தொண்டர்களும் விரும்புவதை விடுத்து, மக்களுக்கும் தொண்டர்களுக்கும் எது சரியானது, பொருத்தமானது என்று தீர்மானித்து மக்களை வழி நடத்த இருவரும் முயன்றாலும் கூட அது தப்பில்லைத்தான்.

ஆனால், இவற்றைச் செய்வதற்கு அவர்கள் மக்களை நெருங்க வேண்டும்; மக்களுடன் – கட்சியின் அடிமட்டத் தொண்டர்களுடன் – ஊடாடிப் பழகி அவர்களின் கருத்தை உள்வாங்க வேண்டும்.

ஆனால் தமிழரசுக் கட்சியில் அந்த ஊடாட்டம் உரிய அளவில் நடப்பதாகத் தெரியவில்லை. மக்களை நெருங்காமல் தொலைவில் இருந்து கொண்டு தீர்மானங்களை எடுக்கும் தலைவர்களினால் மக்களின் கருத்தைப் படிக்க இயலாது. புரிந்து கொள்ள முடியாது.

கூட்டமைப்பில் வாக்குக் கேட்டு பதவியைப் பெற்றுக் கொண்டவர்கள், கூட்டமைப்பின் தலைமைக்கு முதுகில் குத்திவிட்டு காரியம் நடத்துகின்றார்கள்.

அதுவும் தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினையில் மிக முக்கியமான விடயத்தில் கூட்டமைப்பின் ஐக்கியத்தைக் குலைத்து விட்டு, குழப்பி விட்டு, இன்னொரு தரப்புடன் அணி சேர்ந்து குழப்பம் செய்கின்றார்கள்.

இந்த விடயத்தில் ஐக்கியம் முக்கியம் என்று பேசிக் கொண்டு, வேறு ஓர் உலகில் இருந்தபடி சிந்திக்கின்றனர் மாவையும் சம்பந்தனும்.

வேண்டாம், வேண்டாம் என்று கட்சியும் கூட்டமைப்பும் ஒரே குரலில் வலியுறுத்த, தம்மை ஏதோ திரிஞானி – முக்காலமும் உணர்ந்தவர் – என்ற அதிகப் பிரசங்கித்தனமாக கருத்தியலோடு – எண்ண மிதப்போடு – வாய்ப்புக் கிடைத்த மாகாண சபைக்கு நீதியரசர் விக்னேஸ்வரனைக் கொண்டு வந்து இறக்கி, எல்லாவற்றையுமே குழப்பியடித்தவர் சம்பந்தன். அந்த வரலாற்றுத் தவறுக்கு அவர் இன்னும் தமது கட்சியிடம் மன்னிப்புக் கோரவில்லை.

அவர் கொண்டு வந்து இறக்கிய தரப்பே இன்று கூட்டமைப்பைப் பிளந்து, அவர் முதுகில் குத்தியிருக்கின்றது. மூன்று கட்சிக் கூட்டின் – கூட்டமைப்பின் – தலைவர் என்ற கோதாவில் – தோரணையில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலை அணுகும் சம்பந்தனின் தகுதியை கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோவும், புளொட்டும் இன்று தகர்த்து விட்டன. அது புரிந்தும், புரியாதவர் போல – ரெலோவும், புளொட்டும் உள்ளடங்கிய கூட்டமைப்பின் தலைவர் இன்னமும் தாமே என்று ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழு முன், இவ்வளவுக்குப் பின்னரும் அரிதாரம் பூசிக் கொண்டு போய் நிற்கின்றார் அவர். தாம் செய்வது அபத்த நடிப்பு என்பதைப் புரிந்து கொண்டே அவர் இதைச் செய்வது தான் தமிழினத்தின் துரதிஷ்டம்.

மண்ணில் போராட்டத்துடன் நின்ற தகுதியானோர் பலர் இருக்க, அவர்களை எல்லாம் புறமொதுக்கி, கட்சியினர் எல்லோரும் வேண்டாம், வேண்டாம் என வலியுறுத்த, வலியுறுத்த அதை மீறி, ஒற்றைக் காலில் நின்று விக்னேஸ்வரனைக் கொண்டு வந்து இறக்கி, வரலாற்றுத் தவறிழைத்த சம்பந்தன், இப்போது ரெலோ, புளொட்டுடனான அபத்தக் கூட்டு இத்துடன் போதும் என்று தமிழரசு அடிமட்டத் தொண்டர்கள் வரை எல்லோரும் வலியுறுத்தவும், அதைக் கேட்காத செவிடர் போல செயற்படுகின்றார்.

மீண்டும் அதே ஏமாற்றுப் பாடத்தை படிக்க அவர் தயாராகின்றார். அதுதான் தமிழரின் – தமிழரசின் – தலைவிதி போலும்.

# திங்கட்கிழமை நாட்டைத் திறப்பதாயின் முறையான திட்டம் வகுக்கப்பட வேண்டும்

## விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவிப்பு



நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை எதிர்வரும் திங்கட்கிழமை நீக்குவதாக இருந்தால் முறையான திட்டம் வகுக்கப்பட வேண்டுமென பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

நாடு திறக்கப்படும்போது மீண்டும் ஆரம்ப நிலைக்கே சென்றால் இந்தத் தொற்றை முடிவுக்கு கொண்டுவர முடியாது என அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை எதிர்வரும் திங்கட்கிழமை நீக்குவதாக இருந்தால், பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுக்கும்போது அந்தந்த பிரிவினரால் தற்போதே திட்டமொன்று வகுக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

திட்டம் வகுக்கப்பட்டால் மட்டுமே நாட்டை திறக்க முடியுமா என்பது தொடர்பாகத் தீர்மானிக்க முடியுமென்றும் அவ்வாறு இல்லாவிட்டால் நாட்டைத் திறப்பதில் சிக்கல் நிலை ஏற்படுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கை கிரிக்கெட் தொடர்பான விசாரணைகள் ஊடகங்களுக்கு வெளிப்படுத்தப்படமாட்டாது

இலங்கைக் கிரிக்கெட் தொடர்பில் உலக அளவில் கவனம் செலுத்தப்படும் என்பதால், இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தில் இடம்பெறும் விசாரணைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு வெளிப்படுத்தப்படாது என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாவிற்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்த அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மேலும் கூறுகையில் –

இலங்கை கிரிக்கெட் சபையில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பில் கோப் குழுவும் கடந்த காலங்களில் அவதானம் செலுத்தியிருந்தது. இது தொடர்பில் கோப் குழுவிடமிருந்து கிடைக்கப்பெறும் புதிய அறிக்கைக்குப் பின்னர் நடவடிக்கை எடுக்க எதிர்பார்த்துள்ளோம்.

இலங்கைக் கிரிக்கெட் தொடர்பில் உலக அளவில் கவனம் செலுத்தப்படும் என்பதால்,



இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தில் இடம்பெறும் விசாரணைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு வெளிப்படுத்தப்படா.

இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தில் ஊழல் மோசடியில் ஈடுபட்டவர்களை விளையாட்டுத் துறை அமைச்சர் என்றவகையில் நானோ, எங்களது அரசாங்கமோ பாதுகாக்கப்போவதில்லை. அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். – என்றார்.

# அதிபர், ஆசிரியர்களுக்கு இம்மாத சம்பளத்துடன் இடைக்கால கொடுப்பனவு கிடைக்கப்பெறுமாம்!

## அமைச்சர் ரமேஷ் பத்திரண உத்தரவாதம்



அதிபர்கள், ஆசிரியர்களுக்கான 5 ஆயிரம் ரூபா இடைக்காலக் கொடுப்பனவு இந்த மாதச் சம்பளத்துடன் கிடைக்கப்பெறும் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

கொவிட் தொற்றால் ஏற்பட்டுள்ள பொருளாதார தாக்கத்தால் அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை முழுமையாகத் தீர்ப்பதில் சிக்கல் உள்ளது.

இதனால் அடுத்த வரவு – செலவுத் திட்டத்தின் மூலம் அவர்களது சம்பள முரண்பாட்டைக் கட்டம் கட்டமாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். – எனத் தெரிவித்துள்ளார்.

# தாயின் இறப்பை தாங்கமுடியாத மகன் வெள்ளவத்தைப் பகுதியில் தற்கொலை

வெள்ளவத்தையில் பல்கலைக்கழக மாணவன் ஒருவர் தற்கொலை செய்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொறியியல் துறையில் கல்வி கற்கும் 26 வயதான மகன் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளவத்தை – மகேஸ்வரி வீதி பகுதியில் இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளதாக வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவரின் தாயின் மரண செய்தியை தாங்கிக்கொள்ள முடியாமல் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மகேஸ்வரி வீதியில் வசித்து வந்த தாயொருவர் மாரடைப்பு காரணமாக களுபோவில வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார். எனினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் குறித்த தகவலை மூத்த சகோதரன் வீட்டிலிருந்த தனது இளைய சகோதரனுக்குத் தொலைபேசி மூலம் தெரியப்படுத்தியுள்ளார். இதனால் மனமுடைந்த இளைய சகோதரன், வீட்டின் மின் விசிறியில் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளார். தற்கொலை செய்து கொண்டவர் தாயின்மீது அளவுகடந்த அன்பு கொண்டிருந்தார் என அவரது மூத்த சகோதரன் பொலிஸ் விசாரணையின் போது தெரிவித்துள்ளார்.

# முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கை இல்லாத் தீர்மானம் என்னிடம் திணிக்கப்பட்டதே தவிர எனக்கு சம்பந்தமில்லை!

## சிறிதரனின் கருத்துக்கு சி.வீ.கே. விளக்கம்



வடக்கு மாகாண சபை இயங்கிய காலத்தில் முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஆளுநரிடம் சமர்ப்பிக்கச் சென்றபோது அது எனது கையில் திணிக்கப்பட்டது. இதனால் நான் அதிர்ச்சியடைந்த போதும் அந்த இடத்தில் நின்று பிரச்சினைப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு கடிதம் என்னால் ஆளுநரிடம் சகல உறுப்பினர்கள் முன்னிலையில் கையளிக்க வேண்டியதாயிற்று.

- இவ்வாறு விளக்கமளித்துள்ளார் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம்.

சிறிதரனால் ஊடகமொன்றுக்கு வழங்கப்பட்ட செவ்வியில் அவைத் தலைவர் தொடர்பான கருத்துக்கு விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டை நேற்று (புதன்கிழமை) நடத்தினார். அந்த மாநாட்டிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவற்றை முழுமையாகத் தருகிறோம் -

கடந்த 05.09.2021 ஆம் திகதி ஒளிபரப்பாகிய 'ஸ்பொட் லைற்' நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வடமாகாண சபையை குழப்புவதில் நிறைய அனுபவம் வாய்ந்த நானும் பாரிய கவனம் செலுத்தினேன் என்று குற்றம் சாட்டியிருந்தார். இதனைச் சில அச்சு ஊடகங்களிலும் செய்தியாக்கப்பட்டதால் உண்மை நிலையைத் தெளிவுபடுத்தல் மிக அவசியம் என்பதால் இந்த ஊடக சந்திப்பை கூட்டியிருக்கின்றேன்.

நான் செய்த தவறாக அவர் குறிப்பிட்டது 17 சபை உறுப்பினர்களுடன் சேர்ந்து மாகாண சபையை கலைப்பது தொடர்பான என்ற கடிதத்தை ஆளுநரிடம் நான் கையளித்தமை பற்றியது. இந்த விடயம் தொடர்பாக பல தெளிவுபடுத்தல்களை நான் கடந்த 5 வருடங்களாக வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறேன்.

ஆளுநருக்குக் கொடுத்த கடிதம் முதலமைச்சர் மீது நம்பிக்கையில்லை என்பது மட்டுமே தவிர. சபையைக் கலைப்பது தொடர்பானது அல்ல என்பதை முதலில் குறிப்பிட விரும்புகின்றேன்.

முதலமைச்சர், அமைச்சர்களுக்கு எதிராக விசாரணைக் குழு ஒன்றை சபை நியமிக்க வேண்டும் என்ற முன்மொழிவைச் சமர்ப்பித்தபோது இதன் பொருட்டு சபை உறுப்பினர்களைக் கொண்ட தெரிவுக் குழுவை நியமிக்க முடியுமே தவிர, முதலமைச்சர் கோரியபடி வெளியாள்கள் கொண்ட குழுவை நியமிப்பதை நிராகரித்தவரே நான்தான். முதலமைச்சர் தமக்குரிய சிறப்புரிமைக்கமைய அமைச்சர்களை நீக்கும்படி ஆளுநருக்கு சிபார்சு செய்யலாம் என்பதால் விசாரணைக்குழு தேவையற்றது என்பதே எமது நிலைப்பாடாக இருந்தது. அதனால் சுமார் ஒன்றரை நாள் விவாதத்தின் பின்பு முதலமைச்சர் தாமே ஒரு குழுவை நியமிக்கலாம் என்று நாம் கூறியதற்கு அமையவே விசாரணைக்குழு அவரால் நியமிக்கப்பட்டது. அந்த அறிக்கையை சபையில் சமர்ப்பித்த பின் நடைபெற்ற விவாதத்தின் முடிவில் பொ. ஐங்கரநேசன் தன்னிலை விளக்கம் அளித்தார். முதலமைச்சர் அதனையும் பரிசீலித்து அவரது முடிவை இரண்டு நாள்களின் பின்பு தெரிவிக்கலாம் என்ற எனது கோரிக்கையை நிராகரித்து தமது தீர்மானத்தை வாசிக்க ஆரம்பித்ததும் அநேகமான மாகாண சபை உறுப்பினர்கள் சபையை விட்டு வெளியேறினர். இவ்வாறான நடவடிக்கை பற்றி எனக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை. ஆனால் பிற்பகல் 3 மணிக்கு கட்சித் தலைமையகத்தில் ஒரு கூட்டம் இருப்பதாகவும் அதில் கலந்து கொள்ளுமாறும் எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கமைய நான் சபை அமர்வு முடிந்த பின்பு கட்சித் தலைமையகத்துக்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு பின்பு சென்றபொழுது அநேகமான உறுப்பினர்களும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர். முதலமைச்சர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கு ஆளுநருக்குச் சமர்ப்பிப்பதற்கான கடிதம் கணினியில் தட்டச்சிடப்பட்டுக் கொண்டிருந்தது. அது கட்சி உறுப்பினர்களின் முடிவு என எனக்குத் தெரிவிக்கப்பட்டது. அதில் எனது பெயர் முதலில் இருந்தபோது அப்படிப் போட வேண்டாம். அது தவறு என பலமுறை வற்புறுத்தியும் அதனை நிராகரித்து எனது பெயர் முதலில் தட்டச்சாக்கிவிட்டார்கள். வேறு வழியின்றி கையொப்பமிட நான் நிர்ப்பந்திக்கப்பட்டேன்.

இந்தக் கடிதத்தை ஆளுநரிடம் வழங்குவதற்கு என்னையும் அழைத்தார்கள். அப்படி நானும் மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தனும் எனது வாகனத்தில் புறப்படும்போது கமலேஸ்வவரன் அந்தக் கடிதக் கோவையை கொண்டு வந்து என்னிடம் தந்தார். அதை நான் ஏற்காமல் இந்த நடவடிக்கையை முன்னெடுத்த வர்களே கொடுக்க வேண்டும் எனக் கூறியதும் அவர் அதை எடுத்துச் சென்றார்.

பின்பு ஆளுநரைச் சந்திக்க மேல்மாடியில் உறுப்பினர்களும் ஊடகவியலாளர்களும் உட்சென்றபோது ஏற்பட்ட நெருக்கடிக்குள் அந்தக் கோவை எனது கையில் திணிக்கப்பட்டது. இதனால் நான் அதிர்ச்சியடைந்த போதும் அந்த இடத்தில் நின்று பிரச்சினைப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு கடிதம் என்னால் ஆளுநரிடம் சகல உறுப்பினர்கள் முன்னிலையில் கையளிக்க வேண்டியதாயிற்று.

எனவே, இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையின் முன்னெடுப்பிலோ வேறு விதத்திலோ எனக்கு எதுவித சம்பந்தமும் இல்லை என்பதைக் காணலாம். சகல உறுப்பினர்களும் சேர்ந்து கட்சி சார்ந்து கட்சித் தலைமையகத்தில் எடுத்த முடிவுக்கு எப்படி என்னைப் பொறுப்பாளி ஆக்கலாம்.

தாம் இது பற்றி 'கட்சித் தலைவர் மாவை அண்ணையைக் கேட்டபோது இதைப் பற்றி தன்னுடன் கதைக்கவில்லை' என தம்மிடம் கூறினார் என சிறிதரன் கூறுகின்றார். இந்தச் சம்பவம் நடைபெற்றபோது மாவை சேனாதிராசா தலைமையகத்திலே இருந்தார் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். இந்தக் கைங்கரியத்தை முன்னெடுத்தவர்கள் வேறு எங்கேயோ கூடித் தயாரித்த வரைவை அவரிடம் காட்டிய பின் மாற்றியமைக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

மேலும் ஆளுநர் அலுவலகத்தில் என்னைக் கடிதத்தைக் கொடுக்க வைத்த திட்டமிட்ட சதி பற்றியும் இதில் நான் பலிகடாவாக்கப்பட்டமை பற்றியும் உடனடியாகவே கட்சித் தலைவரான மாவை சேனாதிராசாவுக்கு நேரடியாக எனது கவலையைத் தெரிவித்த பின்பே நான் எனது இல்லம் திரும்பினேன். இதனை அவரிடமே ஊடகவியலாளர்கள் கேட்கலாம். அவரிடம் பேசிய பின்பே இந்த ஊடகவியலாளர் சந்திப்பை அழைத்தேன் என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

ஆகவே, ஏதோ கட்சித் தலைவருக்குத் தெரியாமல் இந்தச் செயற்பாட்டை நான் முன்னெடுத்த மாதிரியான தொனிப்பட சிறிதரன் கூறிய கருத்து தவறானதும் கவலையளிப்பதுமாகும். இது ஒரு தனிமனிதன் கையாண்ட விடயமல்ல. 17 சபை உறுப்பினர்கள் சேர்ந்து சமர்ப்பிக்கப்பட்ட விடயமாகும். உண்மையை மறைக்கமுடியாது. மாவை சேனாதிராசா அப்படி உண்மையை மறைக்கக்கூடியவர் அல்லர்.

நான் அவைத் தலைவர் மட்டும்தான் என்பதையும் நிர்வாக விடயத்தில் நேரடிப் பொறுப்பு எதுவும் கொண்டிருக்கவில்லை என்பதும் சாதாரண அறிவுக்கெட்டிய விடயம். மாகாண சபை நிர்வாகத்தை யார் யார் குழப்பினார்கள். எவற்றை எல்லாம் குழப்பினார்கள். அவற்றின் பின்னணியில் யார் யார் இருந்தார்கள் என்ற நூற்றுக் கணக்கான விடயங்கள் எனக்குத் தெரியும். கட்சி நலன் கருதி நான் அவை பற்றிப் பொது வெளியில் பேசியதில்லை. அதனால் நான் பலவீனமானவன் என்று யாரும் கருதக் கூடாது. இப்பொழுது நடப்பது போல தமிழரசுக் கட்சிக்குள் தன்பக்க கோல் அடிக்கும் செயல்பாடு இல்லாத வரலாற்றிநூடாக வந்தவன் நான்.

'ஊக்கமுடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்கு பேருந்தகைத்து'

- என்றார் வள்ளுவர். தேவைப்படும் போது அவை பற்றி பேசுவேன். 50 வருடத்துக்கு மேலான அரசியல் மற்றும் மக்கள் சேவை அனுபவமும் 20 வருடத்துக்கு மேலான தேர்தல்களைச் சந்தித்த அனுபவமும் எனக்குண்டு என்பதை நான் கூறியாக வேண்டும்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டமளிப்பு அடுத்த மாதம்!

## கொவிட் நிலைமையால் ஒத்திவைப்பு

**(இ. கலையமுதன்)**

யாழ்ப்பாணம்,செப் 8

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி தற்போதைய கொரோனா பெருந்தொற்று நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அடுத்த மாதம் 7,8,9 ஆம் திகதிகளுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஊடகப்பிரிவு வெளியிட்ட செய்திக்குறிப்பில் -

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதியை இம்மாதம் 16 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் நாட்டின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு பட்டமளிப்பு விழா ஏற்பாடுகள் பற்றி ஆராய்வதற்காக பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாக் குழு நேற்று (புதன்கிழமை) காலை துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் கூடியது.

தற்போதைய நிலைமைகள் பற்றி ஆராய்ந்த குழு, நாட்டின் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு பட்டமளிப்பு விழாவை அடுத்த மாதம் 7 ஆம் திகதி முதல் 9 திகதி வரை யாழ். பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடத்துவதெனத் தீர்மானித்துள்ளது.

எனினும் சூழ்நிலைகளைப் பொறுத்து குறித்த தினங்களில் பட்டமளிப்பு விழாவைத் திட்டமிட்டபடி பட்டதாரிகளுடன் நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டால் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலையில் நடத்தி பட்டங்களை உறுதிப்படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலைக்கு மாற்றுவது தொடர்பான இறுதித் தீர்மானம் இம்மாதம் 23 ஆம் திகதி அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## 35வது பொதுப் பட்டமளிப்பு (பகுதி II) விழாவைப் பிற்போடல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும் வழங்குவதற்கென எதிர்வரும் 2021 செப்டம்பர் மாதம் 16, 17ஆம் திகதிகளில் நடாத்தத் திட்டமிடப்பட்டிருந்த 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதியினை நாட்டின் தற்போதைய கொவிட் 19 சூழ்நிலை காரணமாக எதிர்வரும் 07 ஆம் 8 ஆம் திகதிகளில் நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய கொவிட் 19 சூழ்நிலை தொடருமாயின், மாற்று ஏற்பாடாக பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலையில் (Virtual) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் எதிர்வரும் 2021-10-07ஆம் திகதி நடாத்துவதற்கும், நிகழ்வுகளை நேரலையாக ஒளிபரப்பு செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பட்டமளிப்பு விழாத் தொடர்பான மேலதிக விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

**பதிவாளர்,**
**யாழ். பல்கலைக்கழகம்**
**08.09.2021**

காலைக்கதிர் Kalaikkathir

# குறிப்பிட்ட ஒரு பிரிவினரை போஷிப்பதற்காகவே அரசாங்கத்தின் சட்ட ஏற்பாடுகள் – கபீர் ஹாசிம்

அரசாங்கம் சட்டமாக்க நடவடிக்கை எடுக்கும் அனைத்துச் சட்டங்களும் குறிப்பிட்ட ஒரு குழுவினரை போஷிப் பதற்காகவே மேற்கொள்ளப்படுகின்றன. வரி விலக்களிப்பு சட்டமூலமும் அரசாங்கத்துக்குத் தேவையான தனவந்தர்களை இலக்குவைத்தே மேற்கொள்ளப்படுகின்றது என எதிர்க்கட்சி உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற 61ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச்சேவை சட்டத்தின் கீழான கட்டளை, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்தனை ஆணைக் குழு சட்ட மூலம், உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான கட்டளை கள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாடு) சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

அரசாங்கம் சட்டமாக்க நடவடிக்கை எடுக்கும் அனைத்துச் சட்டங்களும் குறிப்பிட்ட ஒரு குழுவினரை போஷிப்பதற்காகவே மேற்கொள்ளப்படுகின்றன. 2019 இல் வரிக் குறைப்பு மேற்கொண்டதன் மூலம் அரச வருமானம் 60 ஆயிரம் கோடி ரூபாவை இல்லாமலாக்கி இருக்கின்றது. இந்த வரி குறைப்பால் பொது மக்களுக்கு ஒரு சதமேனும் நன்மை கிடைக்கவில்லை. அப்படியாயின் யாருக்கு அதன் நன்மை கிடைத்தது.? நாட்டின் பொருளாதாரப் பிரச்சினை ஆரம்பித்ததே இதன் பின்னராகும்.

அதேபோன்று 2002 வட்டிவீதத்தை குறைத்து தனவந்தர்களுக்கு உதவியளித்தார்கள். சாதாரண வியாபாரம் செய்பவர்களுக்கு வட்டி வீதம் குறையவில்லை. சாதாரண வியாபாரிகளுக்கும் மொத்த வியாபாரிகளுக்கும் இடையில் வட்டிவீதத்தில் பாரிய வேறுபாடு இருப்பதாக மத்திய வங்கி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அரசாங்கம் தற்போது வரி விலக்களிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதும் சாதாரண மக்களுக்காக அல்ல.



மேலும் நாட்டின் தற்போதைய கொவிட் நிலைமையில் அன்டிஜன் தொகுதி இந்தியாவில் இலங்கை பணத்துக்கு 548 ரூபாவாகும். ஆனால் எமது நாட்டில் 2 ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. இது 5 மடங்கு அதிகமாகும்.

ஏன் 548 ரூபாவுக்கு எமது மக்களுக்கு வழங்க முடியாது? அதேபோன்று பி.சி.ஆர். பரிசோதனை ஒன்று இந்தியாவில் 2 ஆயிரம் ரூபாவாகும். எமது நாட்டில் 6 ஆயிரத்து 500 ரூபாவாகும். இந்த உபகரணங்களைத் தங்களுக்கு தேவையானவர்கள் கொண்டுவருவதற்கே அரசாங்கம் தற்போது வரி விலக்களிப்பு சட்டமூலத்தை அனு மதித்துக்கொள்ள முயற்சிக்கின்றது.

அதனால் அரசாங்கம் சமர்ப்பித்திருக்கும் வரி விலக்களிப்பு சட்டமூலம் குறிப்பிட்ட ஒரு பிரிவினரை இலக்கு வைத்து சமர்ப்பிக்கப்பட்டதாகும். எமது பொருளாதாரத்தில் இருக்கும் பிரச்சினைகளை அரசாங்கம் முறையாக ஆராயவில்லை. அதனால் எமது வரிக் கொள்கை நிதிக்கொள்கையில் மாற்றத்தை மேற்கொள்ளவேண்டும். அதற்காக கட்டமைப்பு ரீதியிலான மாற்றத்தை மேற்கொண்டு சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாட வேண்டும்.

அத்துடன் நாட்டின் சுயாதீனத்தை பாதிப்படையச்செய்து யாரிடமும் கடன் பெறுவதில்லை என அரசாங்கம் தெரிவிக்கின்றது. ஆனால் நாட்டின் வளங்களை அடியோடு வெள்ளைக்காரர்களுக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

# ஆழ்கடல் மீன்பிடிக் கலன்களுக்கு கண்காணிப்பு உபகரணங்கள்!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கினார்

ஆழ்கடல் மீன்பிடிக் கலன்களுக்கான வி.எம்.எஸ். கண்காணிப்பு உபகரணங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வு நேற்று (புதன்கிழமை) கொழும்பு டிக்கோவிட்ட மீன்பிடி துறைமுகத்தில் நடைபெற்றது.

ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் பெற்றுக் கொள்ளப்பட்ட சுமார் 4 ஆயிரத்து 200 வி.எம்.எஸ். படகு கண்காணிப்பு உபகரணங்களை படகு உரிமையாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் முதற்கட்ட நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா – தெரிவிக்கையில்

இலங்கையில் பதிவு செய்யப்பட்ட சுமார் 6 ஆயிரத்து 500 ஆழ்கடல் பலநாள் மீன்பிடிக் கலன்கள் பயன்பாட்டில் இருக்கின்ற நிலையில் அனைத்து மீன்பிடிக் கலன்களுக்கும் கண்காணிப்பு கருவிகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

மேலும், வி.எம்.எஸ். கருவிகளை சரியான முறையில் பயன்படுத்துவதன் மூலம் எல்லை தாண்டிச் செல்லுதல் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் போன்றவற்றால் ஏற்படக்கூடிய தேவையற்ற அசௌகரியங்களைத் தடுப்பதுடன் மீன்கள் செறிந்து வாழும் பிரதேசங்களை அடையாளம் கண்டுகொள்ளவும் உதவியாக இருக்கும் எனவும் தெரிவித்திருந்தார்.

சர்வதேச கடலில் மீன்பிடியில் ஈடுபடுகின்ற மீன்பிடிக் கலன்களில் வி.எம்.எஸ். கருவிகள் பொருத்தப்பட வேண்டும் என்பது சர்வதேச நியமங்களில் ஒன்றாக இருக்கின்றது.

இந்நிலையில் குறித்த மீன்பிடிக் கலன் உரிமையாளர்களால் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் நடைமுறையில் இருந்த குறித்த கண்காணிப்பு பொறி முறையை வினைத் திறன்மிக்கதாக மாற்றித் தருமாறும் அனைத்து கலன்களுக்கும் பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர், ஐ.எம். ஓ. எனப்படும் சர்வதேச நிறுவனம் மற்றும் ஆஸ்திரேலிய அரசாங்கம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இந்தச் செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# தனிமைப்படுத்தல் மீறல் 674 பேர் கைதாகினர்

தனிமைப்படுத்தல் விதிகளை மீறியமை தொடர்பில் நேற்று புதன்கிழமை காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்தில் 674 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய கடந்த ஆண்டு ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் இது வரையில் 67 ஆயிரத்து 342 பேர் தனிமைப் படுத்தல் விதிகளை மீறியமை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. இவை தவிர சோதனைகளின் பின்னர் 615 வாகனங்களில் பயணித்த 890 பேர் மேல் மாகாணத்திலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 812 வாகனங்களில் பயணித்த 1,206 பேர் மேல் மாகாணத்திற்குள் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளர் எனவும் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# நல்லாட்சி அரசின் வினைத்திறனற்ற முகாமைத்துவமே தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு காரணம்



## அமைச்சர் செஹான் சாட்டை

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வினைத்திறனற்ற பொருளாதார முகாமைத்துவம் மற்றும் பொருத்தமற்ற கொள்கைகள் காரணமாகவே கொவிட் தொற்று நெருக்கடிக்கு மத்தியில் பாரதூரமான பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுக்கவேண்டி ஏற்பட்டிருக்கின்றது என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற 61ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச்சேவை சட்டத்தின் கீழான கட்டளை, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்தனை ஆணைக்குழு சட்டமூலம், உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான கட்டளைகள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாடு) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

பொருளாதாரம் முதல்முறையாக வீழ்ச்சியடைய ஆரம்பித்தது 2015ஆம் ஆண்டிலாகும். நல்லாட்சி அரசாங்கத்தில் இருந்தவர்களின் தேவைக்கு ஏற்றவகையில் செயல்பட்டிருக்காவிடின் இன்று நாம் கொவிட் தொற்றுக் காலப்பகுதியில் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்திருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டிருக்காது.

2015 முதல் 2019ஆம் ஆண்டுவரையான காலப்பகுதி எவ்வித சவால்களும் இல்லாத காலகட்டமாகும். நாட்டில் எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. அவ்வாறான காலகட்டத்திலேயே, மிகவும் சவால்களுக்கு மத்தியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் கட்டியெழுப்பப்பட்டிருந்த பொருளாதாரத்தை வீழ்ச்சியடையச் செய்திருந்தனர்.

2019ஆம் ஆண்டு நாம் அரசாங்கத்தை பொறுப்பேற்றுக்கொண்டிருந்த தருணத்தில் பொருளாதாரம் மிக மோசமான நிலையில் இருந்ததுடன், திறைசேரியும் மிகவும் மோசமானதாகவே இருந்தது. இதனை சரிசெய்வதற்கான முயற்சிகள் ஜனாதிபதியால் எடுக்கப்பட்டிருந்த சில மாதங்களிலேயே நாடு கொவிட் தொற்றுக்கு முகங்கொடுக்க நேரிட்டது.

கொவிட் தொற்றுக் காரணமாக 2021ஆம் ஆண்டில் மாத்திரம் ஒதுக்கப்பட்ட நிதிக்கு மேலதிகமாக 35 ஆயிரம் கோடி ரூபா நிதியை சுகாதாரத்துறைக்காக செலவிட்டுள்ளது.

மக்களுக்காக நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். சவால்களுக்கும் செலவுகளுக்கும் மத்தியில் அரச ஊழியர்களின் சம்பளத்தில் ஒருசதம்கூட குறைக்கவில்லை. ஓய்வூதியத்தை துண்டிக்கவும் இல்லை.

எனவே கொவிட் பிரச்சினைக்கு மத்தியில் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இறுதி காலாண்டுமுதல் நாட்டின் பொருளாதாரத்தில் ஒரு புத்தெழுச்சி ஏற்படும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. அதற்கான வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் இதற்கான பல முன்மொழிவுகளை உள்ளடக்க இருக்கின்றோம். – என்றார்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 125

### 346.கடைசி நாள்களில் பிரபாகரனது திட்டம் எதுவாக இருந்தது?

பிரபாகரனது இறப்புக்குப் பிறகு வந்த செய்திகளைத்



தொகுத்து அறிந்தளவில் அவர் போர் வலயப் பகுதியிலிருந்து, வெளியேறுவதிலும், அவரை அங்கிருந்து வெளியே எடுப்பதிலும்தான் கே.பியும் கவனம் செலுத்தினார். இதற்கு பக்கச் சார்பாக சரணடைய விரும்பிய நடேசன், புலித்தேவன் அவர்களோடு நின்ற மணம் முடித்திருந்த பல போராளிகளின் சரணாகதியும் இணைக்கப்பட்டது. அவர்கள் சரணடைய விரும்புகிறார்கள், அதற்கான ஏற்பாடுகள் பற்றி விஜேய் நம்பியாரிடன் கே.பி. மூலம் மட்டும் வற்புறுத்தாமல், அவர்களே நேரடியாக நாடாளுமன்ற உறுப்பினர் சந்திர நேரு, கஜேந்திரகுமார் போன்றோருடன் பேசி அவர்கள் அவற்றை மஹிந்தவுடனும், பஸிலிடமும் தெரிவித்து, ஆவன செய்யக் கேட்டிருந்தனர். அந்த அடையாளம் ஏற்றுக் கொள்ளப்படும் . என்றும் தெரிவிக்கப்பட்டது.

அது ஒரு புறம் நடக்க, பிரபாகரனோடு உடைத்துக் கண்டு வெளியேறத் தற்கொலைப் படையினர், அவரது பாதுகாப்பாளர் என 35 போராளிகள் ஒழுங்குபடுத்தப்பட்டு, அவர்கள் பிரபாகரனின் குடும்பம் செல்கிற வாகனத்துக்குப் பாதுகாப்பாகப் போகும் வேளையில் இராணுவ நிலைகளைத் தற்கொலைத் தாக்குதல்களால் தகர்த்து நிலைகுலைய வைக்க, அந்த இடைவெளியில் பிரபாகரன், கட்டமைப்புக்கூடாக வெளியேற வசதி செய்வது என்பதுடன் அவர்கள் புறப்படுவது 17ஆம் திகதி நடுநிசிக்குப் பிறகு என நேரம் குறிக்கப்பட்டது.

அதை இராணுவத்திடமிருந்து திசை திருப்பி, கவனத்தை வேறு பகுதிகளுக்கு ஈர்க்க அந்த குறிப்பிட்ட நேரத்தில் பிரபாகரனின் மகன் சார்ல்ஸ் அந்தனியின் தலைமையில் ஒரு போராட்டக் குழு, படைகளைத் தாக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இவை நடந்தன. தங்களுக்குச் சாவைத் தவிர வேறு வழியில்லை, சாகும் வரை போராட்டம் என்று சார்ல்ஸ் அந்தனியின் படையிலிருந்தோர் சமர் செய்தனர். பிரபாகரனோடு போனவர்கள் தற்கொலைத் தாக்குதலால் இராணுவ நிலைகளைத் தாக்க, ஒரு நேரத்தில் கே.பிக்கு பிரபாகரனிடமிருந்து "தாங்கள் உடைத்துக் கொண்டு வெளியேறிவிட்டோம்" என்ற தகவல் வந்தது. கே.பி. நிம்மதியில் இருந்தார். அதுதான் பிரபாகரனிடம் இருந்து வந்த கடைசிச் செய்தி.

அடுத்தநாள் செய்திகள் வேறுவிதமாக வந்தன. பிரபாகரனும் போராளிகளும் முதல் இராணுவக் கட்டமைப்பு வலயத்திலிருந்து தப்பி வெளியேறினாலும் தாங்கள் முன்னரே எதிர்பார்த்து அமைத்த இரண்டாவது, மூன்றாவது வலயங்களின் காத்திரமான அரண்களை உடைத்துக் கடக்க முடியாமல், சுற்றிவளைக்கப்பட்டு அகப்பட்டு மடிந்தனர் என்ற செய்திகளை இராணுவத்தினர் தந்தனர். சார்ல்ஸ் அந்தனியின் உடல் அடையாளம் காணப்பட்டதாகவும், நடேசன், புலித்தேவன் பற்றியோரைப் பற்றி செய்திகளும் வந்தன. சாவா வாழ்வா என்ற கடைசி உத்தியாக அவை அமைந்தன.

### 347.அதுதான் நடந்தது என்று ஏற்றுக் கொள்ளப்பட்டதா?

இந்த மரணத்தில் பல சர்ச்சைகள் பல காலத்துக்கு தொடரும். பல அபிப்பிராயங்கள் தேவைக்கேற்றபடி எழுதப்படும். 15 - 19ஆம் திகதி மே 2009 வரை குழப்பமான செய்திகளே எல்லாத் தரப்புகளிலிருந்தும் வெளி வந்து கொண்டிருந்தன. சர்வதேச புலம்பெயர் சமூகத்தின் முன்னால் சரண வைதற்கு ஏற்படுத்தப் பட்டவை கிடப்பில் போடப்பட்டு பதிலேதும் இல்லாமிலிருந்தபோது கே.பி. சர்வதேச ஊடகங்களுக்கு 16, 17ஆம் திகதி மே மாதம் விடுதலைப் புலிகள் தங்களது ஆயுதங்களை மௌனித்து அரசியல் பாதையை முன்னெடுத்து போகத் தயார் என்று சொல்லி அதே அணுகுமுறையை விஜேய் நம்பியார் போன்றோர் ஊடாக ஸ்ரீலங்காவுக்கு வைத்து பேச்சுகள் நடத்தப்பட்டு அவை நிராகரிக்கப்பட்டன.



கே.பியிடம் ஆயுதங்களை மௌனிப்பது சரணடைவா என நேரடியாகக் கேட்கப்பட்டபோது அவர் அது சரணடைவல்ல, நாங்கள் ஆயுதங்களை மௌனித்துவிட்டு அவற்றைப் பாவிக்காமல் பேச்சு வார்த்தைகளில் அரசியல் தீர்வை நோக்கிப் போகலாம் எனத் தெரிவித்தார்.

இதுவும் மறுக்கப்பட்டு அவர்கள் தனித்தனியாக சரணடையலாம், ஆயுதங்களும் கையளிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைகள் வைக்கப்பட்டன.

இவற்றுக்கு இடையில்தான், கே.பியினாலும் பிரபாகரனும் அவரது குடும்பமும் அவரோடு இருந்த போராளிகளும் போர் வலயத்தை விட்டு வெளியேறும் திட்டம் வகுக்கப்பட்டிருந்தது; வகுக்கப்பட்டுக் கொண்டிருந்தது - அமுல்படுத்தப்படுவதற்காக. தற்சமயத்துக்கு வெற்றி பெற்றவர்களால், அவருடன் பயணித்த குடும்பத்தினர் தற்கொலை போராளிகள் யாவேருமே இறந்துவிட்டனர் என்று சொல்லப்பட்டது.

அதற்கு முன் இராணுவம் தந்த தகவலில் தளபதி சூசையின் மனைவி பிடிக்கப்பட்டபோது தந்த வாய்மூலத்தில் தலைவர் படுகாயப்பட்டுள்ளார் என்பதால் பதுங்கு குழியில் பலத்த பாதுகாப்போடு தளபதிகள் சூசை, பொட்டு அம்மான் மற்றும் போராளிகளோடு இருக்கிறார் எனவும் பின் அவருக்கு மருத்துவம் பார்க்கச் சென்ற திலீபன் மருத்துவ அணியைச் சேர்ந்த இரண்டு வைத்தியர்கள் தம்மிடம் சரணடைந்து மேலும் தகவல்கள் தர அவற்றில் அவரது பாதுகாப்புக் குழி கிரனேட் தாக்குதலில் முற்றாக அழிக்கப்பட்டு எல்லோரும் இறந்தார்கள் எனச் செய்தி வந்தது.

இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, பிரபாகரனும் குடும்பமும் போராளிகளுடன் பயணம் செய்த வாகனங்கள் ஏவுகணையால் தகர்க்கப்பட்டு அவை தீப்பிழம்புகளால் எரிய பிரபாகரனது உடம்பு எரியும் வாகனத்தில் இருந்து. இழுத்து எடுக்கப்பட்டதாக அறிவித்தார். அடுத்த நாள் அவரது உடம்பு தலையில் சுட்டுகாயங்களோடு நந்திக் கடலில் கண்டு எடுக்கப்பட்டதாகவும், அவரது உடம்புஸ்டரெச்சரில் அங்கிருந்து இராணுவ வீரர்களின் நடுவில் கொண்டு வரும் படங்களும் காட்டப்பட்டன.

அவருடன் பயணித்த குடும்பத்தினர், தற்கொலை போராளிகள் யாவேருமே இறந்து விட்டனர். அவரது மகன் கொல்லப்பட்டு கிடந்த படங்கள் வெளிவந்தன. மஹிந்த பயணத்தில் இருந்து திரும்பி வந்து விமான தளத்தில் மண்டியிட்டு மண்ணை முத்தமிட்டு இன்று நான் முழு நாட்டையும் மீட்டு விட்டேன் என பெருமிதம் காட்டி, அடுத்தடுத்த நாள்களில் தாங்கள் விடுதலைப் புலிகளை முற்று முழுதாக அழித்து விட்டோம், சம்பூரண வெற்றி எங்களுக்க், அதனை கொண்டாட அடுத்த நாள் விடுதலை என்று அறிவித்தார். அதனால் இறந்தவர்களின் சாட்சியங்கள், நடந்தவை பற்றி தெரியவரவில்லை.

(வளரும்)



# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

## எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

அங்கம் -70

ந.வித்தியாதரன்

ஒரு பத்திரிகை ஆசிரியரின் பணி எப்படி இருக்க வேண்டும்? இதுகுறித்து பலரும் பல விதமாக கூறுவார்கள்.

ஊடகத்துறையில் சுமார் ஐம்பது ஆண்டுகாலம் கொடிகட்டிப் பறந்தவர் எஸ்.டி.சிவநாயகம் ஐயா. ஏனையோரைப் போல செய்தியாளர், உதவி ஆசிரியர், செய்தி ஆசிரியர், துணை ஆசிரியர், ஆசிரியர் என்ற பதவி நிலைகளில் ஒவ்வொன்றாக ஏறி வந்தவர் அல்லர் அவர். ஆரம்பத்தில் மட்டக்களப்பில் தமது 'உதயம்' பத்திரிகையிலும், பின்னர் ஓரிரண்டு ஆண்டுகள் 'தினகரன்' பத்திரிகையிலும் பணியாற்றியவர் அவர். பின்னர் நேரடியாக சுதந்திரன் ஆசிரியர் கதிரையில் 1950களில் வந்து அமர்ந்தார். அடுத்த 45 ஆண்டுகள் பல்வேறு பத்திரிகைகளிலும் அவர் ஆசிரியராகக் கோலோச்சினார். அதில் ஐந்து ஆண்டுகள்தான் நான் அவருக்குக் கீழ் பணியாற்றும் வாய்ப்பு கிட்டியது .

அதன் பின்னர் நான் ஆசிரியருக்கான பொறுப்பில் வந்து அமர்ந்த போது அந்த முதல் ஐந்து வருடங்களில் என்ன படிப்பினைகளைப் பெற்றுக் கொண்டேனோ, அவற்றையே எனக்கான ஆதர்ஷ வழிகாட்டலாகப் பின் பற்றினேன் என்று உறுதிபடக் கூறுவேன்.

தம்முடைய 45 வருட ஆசிரியப் பணியை அவர் எவ்வாறு முன்னெடுத்தார் என்பது பற்றி அவரது சம காலத்தவர்கள் பலவாறாக மெச்சிப் பேசுவர். அவற்றையெல்லாம் நான் விவரிப்பது இயலாத காரியம். ஆயினும் ஒரு பத்திரிகையாளனாக அவர் என்னில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் மூலம் நீங்கள் அவரின் பாங்கின் ஒரு பகுதியை தரிசிக்க முடியும் என்று நான் நினைக்கிறேன்.

'தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்'

– என்றார் செந்நாப்போதகர் திருவள்ளுவர்.

சிவநாயகம் ஐயா என்ற தக்காரின் எச்சங்கள் பற்பல. ஆசிரியர்கள் கே.கே.இரத்தினசிங்கம், ம.வ. கானமயிலநாதன் போன்றோரிலிருந்து கடைசியாக தினகரன் ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்ற குணராசா வரை அந்தப் பட்டியல் நீண்டது. அந்தப் பட்டியலில் எனக்கும் ஓர் இடம் உண்டு என்று நினைக்கிறேன்.


ஊடகத்துறையில் அவரது எச்சங்கள் பலப் பல. அதில் நானும் ஒருவன். என் மூலமும் அவரின் தகவு நிலையை நீங்கள் எடை போடலாம் என்று நினைக்கிறேன்.

பத்திரிகை ஆசிரியருக்கு உரிய கதிரையில் நான் அமர்ந்து என்ன செய்தேன் என்று ஏற்கனவே ஏழு, எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் எழுத்தில் வரைந்து இருந்தேன். என்னுடைய அந்த நிலைப்பாடு ஊடாக நீங்கள் சிவநாயகம் ஐயாவின் சிந்தனைப் போக்கை அல்லது அதன் ஒரு சிறு பகுதியையாவது தரிசிக்க முடியும் என நினைக்கிறேன். அதனால் அதனை இங்கு தருகிறேன். என்னுடைய பார்வை ஊடாக சிவநாயகம் ஐயா அவர்களின் சிந்தனையை நீங்கள் நோக்க முடியும் என்று நான் நம்புகிறேன். இத்துறையில் அவரையே என் Role Model ஆக உள்வாங்கிக் கொண்டேன். அவரிடம் நேரில் கண்டறிந்து புரிந்து கொண்டவற்றையே பிற்காலத்தில் என் பாதையாக நான் வகுத்துக் கொண்டேன். இனி, 'ஆசிரியப் பணி முட்படுக்கை' என்ற தலைப்பில் அமைந்த என் குறிப்புக்குள் வாருங்கள். அதன் ஒரு பகுதி பின்வருமாறு அமைகிறது:-

ஒரு பத்திரிகை ஆசிரியரின் பணி எப்படி அமைய வேண்டும்...? அவர் தமக்குத் தாமே பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறைகள், நடவடிக்கைகள், பண்பியல்புகள் எத்தகையனவாக இருக்கவேண்டும்?

இவ்விடயத்தில் பல்வேறு பொறுப்புகள், கடப்பாடுகள், ஒழுக்கவிதிகள் பற்றியெல்லாம் இப்போது கூறப்படுகின்றது.

ஆனால் வித்தியாசமான ஒரு காலகட்டத்திலே – உலகின் பல நாடுகளிலும் நிலவாத ஓர் அசாதாரண புலச்சூழலிலே – பெரும்பாலும் யுத்தக் களத்துக்கு மத்தியில் – ஒரு பத்திரிகை ஆசிரியனாகப் பணிபுரிய வேண்டிய சூழலுக்குள் தள்ளப்பட்ட நான், அந்தக் கள நிலைமைக்கு ஏற்றவாறு எனக்குரிய கடப்பாடுகள், பண்பியல்புகள், பொறுப்புகள் எத்தகையனவாக



அமைய வேண்டும் என்பது குறித்து சில வரையறைகளை எனக்கு நானே வகுத்துக்கொண்டு செயற்பட்டேன்.

அவை பற்றிய சில அம்சங்களை நான் இங்கு பகிர்ந்துகொள்வது ஊடகத்துறையில் பணியாற்ற விரும்புபவர்களுக்கு சில வழிகாட்டுதல்களை வழங்குவதாக அமையக்கூடும். அத்தோடு எனது கடந்த கால பணியின் இறுக்கம், அதன் மீது நேர்மைத் திறத்துடனும் இதயசுத்தியுடனும் நான் வைத்திருந்த பற்றுறுதி ஆகியவை பற்றி எல்லாம் நீங்கள் அறிந்து கொள்ள இது ஒரு சந்தர்ப்பமாகவும் அமையும்.

நான் ஆசிரியராக இருந்த காலத்தில் எனக்குக் கீழ் பணியாற்றிய செய்தியாளர்கள், நிருபர்கள், உதவி ஆசிரியர்கள், செய்தி ஆசிரியர்கள் மற்றும் பிற ஆசிரிய பீட உறுப்பினர்களுடன் பல தடவைகள் நான் கடுமையாக நடந்து கொண்டிருக்கிறேன். அப்படி நடந்து கொள்ளவேண்டிய நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. எனது கோபம் சில சமயங்களில் கடுமையான வார்த்தைப் பிரயோகமாக – தாரையாக – கொட்டும். ஆனால் அவையெல்லாம் ஒரு சில கணத்துள் நேரம் தான். எமது பதவிக்கும், ஆசிரிய பீடக் கடப்பாட்டுக்கும், எமது ஆசிரிய பீடப் பொறுப்புக்கும் அமைவாக நாம் நடந்துகொள்ளத் தவறுவதால் ஏற்படும் சினம் சில சமயங்களில் கடூரமான வார்த்தைகளாக என்னிடமிருந்து வெளிப்படுவதுண்டு. ஆனால் சக பணியாளர் எவரையும் மனதில் வெறுப்பு வைத்து நான் பழிவாங்குவதில்லை; கரித்துக் கொட்டுவதில்லை; அவர்களின் முன்னேற்றத்துக்கு இடைஞ்சல் பண்ணுவதில்லை.

ஒரு பத்திரிகை ஆசிரியனுக்கு உரிய கதிரையில் அமர்ந்த காலத்தில் இருந்து எனக்கு நானே சில விதிகளை வகுத்துக்கொண்டேன்.

எந்த அச்சுறுத்தல் வந்தாலும் எனது பதவிநிலைக்கு இழிவான பெயர்வருவதற்கு இடமே அளிக்காமல், அந்தப் பதவியின் கௌரவத்தைக் காப்பாற்றியே தீர வேண்டும்.

எனக்குக் கீழ் ஆசிரிய பீடத்தில் பணியாற்றும் ஒவ்வொருவரும் வரைகின்ற செய்திகளுக்கும் தார்மீக ரீதியில் நானே பொறுப்பு. ஆகவே எந்தச் சந்தர்ப்பத்திலும் செய்திக்கான பொறுப்புக்காக எனக்குக் கீழ் பணியாற்றும் எவரையும் எனது பத்திரிகை நிர்வாகத்திடமோ அல்லது வெளியில் அரசு, நீதி – நிர்வாகம், சட்டம், இயக்கங்கள் என்று எத்தரப்பினரிடமோ காட்டிக் கொடுக்கவே கூடாது.

எனக்குக் கீழ் பணியாற்றும் எந்தப் பணியாளரும் எழுத்துத் துறையில் திறமையை வெளிப்படுத்தும் போது அதனைத் தட்டிக்கொடுத்து மேலும் ஊக்குவித்து வளர்த்துவிட வேண்டும். அதற்கான வாய்ப்புகளை – வாசல்களை – அவர்களுக்குத் திறந்துவிடவேண்டும். தற்போது விஸ்வரூபம் எடுத்துவரும் தொழில்நுட்ப வசதிகளை வசமாகப் பயன்படுத்திக்கொண்டு எமக்கு அடுத்த தலைமுறை எங்களை விஞ்சும் வகையில் – நாம் வியக்கும் வகையில் – ஊடகத்துறையில் ஜாம்பவான்களாக உயருவார்கள் என்ற யதார்த்தத்தை உணர்ந்துகொண்டு அவர்களைப் பாராட்டி ஊக்குவித்து மேனிலைக்குக் கொண்டு வருவதோடு அதற்கான வாசலைத் திறந்துவிட்டு நாம் விலகி நிற்கவேண்டும்.

– இதுபோன்ற யதார்த்தபூர்வமான, நடைமுறைக்கு அவசியமான பல விதிமுறைகளை எனக்கு நானே. வகுத்துச் செயற்பட்டு வந்தேன். இவ்விடயங்களில் நான் எவ்வளவு தூரம் நேர்மைத்திறத்துடன் செயற்பட்டேன் என்பதற்கு என்னுடன் பணியாற்றிய சக ஊழியர்கள்தான் மதிப்பீடு செய்து சான்றிதழ் தரமுடியும். ஆனால் என்னைப் பொறுத்தவரை நான் எப்போதுமே இவ்விடயங்களில் மனச்சாட்சிக்கு நீதியாகவே நடந்து கொண்டேன். அச்சுறுத்தலுக்கு – பயமுறுத்தலுக்கு – பணிந்து இந்த விடயங்களில் நான் விட்டுக்கொடுப்புடன் நடந்துகொண்டேன் என்ற பேச்சுக்கே இடமளிக்கவில்லை என்பதை உறுதியுடன் கூறுவேன்.

பெரும்பாலும் யுத்தக் கொடூரம் அல்லது இனப் பிணக்கின் விளைவான அதீத அச்சுறுத்தல்கள் ஆகிய வற்றுக்கு மத்தியிலேயே எனது பத்திரிகை ஆசிரியப் பணி கட்டவிழ்ந்தது. இந்தச் சமயங்களில் எனது பத்திரிகைகளில் வெளியான – அனேகமாக அனைத்து செய்திகளுக்குமே – செய்தி எழுதியவரின் பெயரை நான் வெளியிடுவதேயில்லை. சர்ச்சைக்குரிய கட்டுரைகளாயின் அவை கூட புனை பெயரில் பிரசுரமாகும். இந்தக் காரணத்தினால் சம்பந்தப்பட்ட செய்தியாளனின் அல்லது கட்டுரையாளனின் பெயர், புகழ், திறமை பற்றிய பொதுக் கருத்து என்பன மேலோங்கி விடாமல் நான் தடுத்து வந்திருக்கிறேன் என்ற குற்றச்சாட்டு சில தரப்புகளில் இருந்து அவ்வப்போது வெளிவராமல் இருந்ததில்லை.

ஆனால் நான் அப்படிச்செய்ததற்கு ஒருகாரணம் இருந்தது. அந்தச் செய்திகளினால் – அல்லது கட்டுரைகளினால் – எனக்குக் கீழ் பணியாற்றும் யாருக்குமே ஆபத்து வந்து விடக்கூடாது என்பதுதான் எனது உறுதியான நிலைப்பாடு.

கஷ்டமோ நெருக்கடியோ – பாராட்டோ தூற்றுதலோ – அச்சுறுத்தலோ, அரவணைப்போ – எதுவாகிலும் சம்பந்தப்பட்டவரை நெருங்காமல் எல்லாவற்றுக்கும் நானே பொறுப்பேற்றுக் கொண்டேன்.

தவறான செய்திகளுக்காக – அல்லது செய்திகளின் விளைவுக்காக – எந்தப் பாதிப்பும் சம்பந்தப்பட்ட செய்தியாளரை நேரடியாக நெருங்காத வகையில் நான் எப்போதும் அவர்களின் கவசமாக இருந்துகொண்டேன்.

நிர்வாக விடயங்கள் தவிர்ந்து செய்தியின் உண்மைத் தன்மை தொடர்பாக எனது நிறுவனத்தின் நிர்வாகம் கூட எனது ஆசிரியர் பீட ஊழியர்கள் மீது தலையிடாத வகையில் நான் பார்த்துக்கொண்டேன்.

ஒரு செய்தியின் உண்மைத் தன்மை, அது தொடர்பான அம்சங்கள் ஆகியன தொடர்பில் அந்தச் செய்தியை வரைந்த செய்தியாளரையோ அல்லது அதனைப் பிரசுரத்துக்கு அங்கீகரித்த உதவி ஆசிரியரையோ அல்லது செய்தி ஆசிரியரையோ நான் எனது அறைக்கு அழைத்துக் கடிந்துகொள்வேன். காட்டமான வசனத்தில் பேசுவேன். அது சகஜம். ஆனால் எனது நிர்வாகத்தின் தலைமையோ அல்லது வெளியாள்களோ அல்லது இயக்கங்கள், அதிகாரத் தரப்பினர், காவல் துறையினர், படையினர் என இன்னோரன்ன பிறதரப்பினரோ அவர்களுடன் தொடர்பு கொள்ளவோ அல்லது நெருக்குதல் கொடுக்கவோ எச்சந்தர்ப்பத்திலும் நான் இடமளித்ததேயில்லை.

(11ஆம் பக்கம் பார்க்க)



# சாயி வந்தனன்! வாழ்வு தந்தனன்!

(வே.வரதசுந்தரம்)

சாயிபாபா அருட்சிந்தனையை சாயி பக்தர் சாலி கோச் என்பார் கூறக்கேட்டு மனம்சிலிர்க்கும். இதோ அது:-

'எப்போதாயினும் முன்பின் அறிமுகம் இல்லாத ஒரு புதியவர் ஏதேனும் பணவுதவி கேட்பின் 'மன்னிக்கவும் சில்லறை இல்லை' என்பதே என் வழக்கமாயிருந்தது. ஆனால் ஒருநாள் சாயிசத்சங்கத்தில் ஒருகருத்தைச் செவிசாய்த்த பின்னர் என்நிலைப்பாட்டில் மனமாற்றம் ஏற்பட்டது.

ஒருநாள் பேருந்து நிலையத்தில் பேருந்துக்காக காத்து நிற்கையில் வயோதிப முதியவர் ஒருவர் 'தாகமாக இருக்கிறது. காப்பிகுடிக்க சில்லறை தாருங்கள்' என்று கேட்டார். ஆனால் அன்று எனது நாவில் எந்தன் வழமையான வார்த்தைகள் வரவில்லை. மாறாக அன்று சாயி சத்சங்கத்தில் செவிமடுத்த கருத்து என்னுள்ளத்தில் துளிர்த்தது.

அம்முதியவரை அருகிலிருந்த உணவகத்துக்கு அழைத்துச் சென்றேன். ஒருகுவளை காப்பி வாங்கிக் கொடுத்தேன். மளமளவென்று குடித்தார். முகத்தில் மகிழ்ச்சி கொப்பளிக்க, கொப்பளிக்க 'நன்றி! நன்றி! நன்றி! என்று மீண்டும் மீண்டும் கூறினார். என்னுள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கியது. என்கண்கள் குளமாயின.

நான்பேருந்து நிலையம்திரும்பியதும், அங்குநின்று இச்சம்பவத்தை அவதானித்துக் கொண்டிருந்த பெண்மணி 'நீ என்ன மடத்தனமாக நடக்கிறாய். பணத்தை நீ பையில் தேடும்போது அவன் அதனைப் பறித்துக் கொண்டு ஓடியிருப்பான். முட்டாள்.' என்று கடிந்தாள்.

ஆனால் என்மனம் உணர்த்தியது:

'நான் யாருக்காவது உதவிபுரிய முற்பட்டால், சாயிபாபா எவ்வித தீங்கும் ஏற்படாது காப்பார். அப்படி எனது பணம் களவாடப்பட்டால் கூட அதனை ஏதோவொரு வழியில் எனக்குக் கிடைக்க ஏற்பாடு செய்வார் என்பது திண்ணம்.

நாம் பிறரைக் கவனித்து, அவர்தம் துயர் துடைத்தால், சுவாமி நம்மைப் பாதுகாப்பார். மற்றவர்களுக்கு உதவும் அரிய வாய்ப்பு எப்போதாவது, அதுவும் மிக அருமையாகத்தான் வரும்! அதனைக் கைநழுவி விடாது பார்த்துக் கொள்ளுங்கள்.'

இப்போது, நாம் அண்மையில் கொடிய கொவிட் நோய்க்குப் பலியான ஐலண்ட் பத்திரிகை வார இதழின் செய்தி ஆசிரியர் சுரேஷ் பெரேராவினைக் கவர்ந்த சாயிசிந்தனையைப் பார்ப்போம்:

அவர் முதுமையை அனுபவிக்காமல் திடீரென மரணமான செய்தியைப் பார்த்ததும் அதிர்ந்து போனேன். அவ்வதிர்ச்சியில் இருந்து மீள நீண்ட நேரமெடுத்தது. கொழும்பில் இப்பத்திரிகையின் பகுதிநேர நீதிமன்ற நிருபராக பல்லாண்டுகள் நான் பணி ஆற்றியவேளை, அன்னாருடன் நெருங்கிப் பழகியிருக்கிறேன். அவர் நல்லியல்புகள் என்னைக் கவர்ந்தன.

நாடாளுமன்ற நிகழ்வுகளை பக்கச் சார்பின்றிச் சுருக்கமாக ஆனால் சுவையாக, அழகான ஆங்கில நடையில் எழுதி வாசகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்திய செய்தியாளர். இரவு, பகலாக செய்திப் பீடத்தில் பணியாற்றியவர். இன்முகங்காட்டி, கனிவாகப் பேசி அனைவருடனும் பழகுவார். அதிகார தோரணையில்



ஐலண்ட் ஞாயிறு செய்தியாசிரியர்
சுரேஷ் பெரேரா



நிருபர்களுடன் நேரடியாகவோ அன்றித் தொலைபேசி ஊடாகவோ அவர் உரையாடியமையை நான்கண்டதில்லை, கேட்டதில்லை.

செய்திப் பீட ஆசிரியர்கள் பல்வேறு மனப்பாங்கு உடையவர்களாகக் காணப்படுவர். இவர் எந்தச் சூழ்நிலையிலும் அமைதியாக இருப்பார். அனுபவமற்ற செய்தியாளர்கள் சில வேளைகளில் பூரணமற்ற செய்திகளை சமர்ப்பிக்கும் போதுகூட இவர் பொறுமையை இழந்து வாயில் வந்தபடி வார்த்தைகளை அள்ளி வீசமாட்டார். மேலிடத்துக்கு அவர்கள் பற்றி புகார் செய்யமாட்டார். மாறாக உரிய ஆலோசனைகளைக் கூறி வழிநடத்துவார்.

நான் நீதிமன்றச் செய்திகளை எழுதும்போது வழக்காளிகளின் விருப்பு, வெறுப்புக்கேற்ப செயற்படுவதில்லை என்பதால் செய்தி பீடத்துக்கு புகார்கள் வந்ததுண்டு. சிலவேளைகளில் சட்டத்தரணிகள் கூட தமது கட்சிக்காரர்களின் சார்பாக அவ்வாறு கோருவதுண்டு. சில வேளைகளில் விரல்விட்டு எண்ணக் கூடிய சில சட்டத்தரணிகள் கூடத் தமக்குள்ள தொழில்சார் வரப்பிரசாதங்களைப் பயன்படுத்தி சாட்சிக்கூண்டில் நிற்கும் சாட்சிகளிடம் அவர்களை அசௌகரியப்படுத்தும் வண்ணம் அல்லது அவர்களின் மனோதிடத்தை பலவீனப்படுத்தும் தீயநோக்குடன், வழக்குடன் எவ்விதத் தொடர்பும் இல்லாத வினாக்களைக் கேட்டுவிட்டு, அவற்றைப் பத்திரிகையில் பிரசுரிக்குமாறு கோருவதுண்டு. அவ்வாறு நிருபர்கள் செயற்படாவிடின் நிருபர்களுடன் அவர்கள் தர்க்கத்தில் ஈடுபடுவர்.

இத்தகைய அனுபவம் எனக்கும் ஏற்பட்டதுண்டு. பிரபல அரசியல்வாதி, முன்னாள் அமைச்சருக்கு எதிரான ஆள்கடத்தல் வழக்கில் மற்றும் ஒரு பௌத்த பிக்குவிற்கு எதிரான வழக்கில் இத்தகைய வாக்குவாதத்தில் ஈடுபடவேண்டி ஏற்பட்டது.

'வழக்குடன் தொடர்பில்லாத வினாக்களை உள்நோக்கத்துடன், சட்டத்தரணிகளுக்கு உரிய வரப்பிரசாதங்களைக் கைக்கொண்டு, சட்டத்தரணிகளுக்கான தார்மீகக் கோட்பாடுகளை மீறி, சாட்சிக் கூண்டில் நிற்கும் சாட்சிகளிடம் நீங்கள் வினாக்களைத் தொடுத்தாலும், நான் பத்திரிகா தர்மத்தை மீறி எனது மனச்சாட்சிக்கு விரோதமாகச் செயற்பட்டு எனது பத்திரிகைக்கு மஞ்சள் பத்திரிகை என்ற அவப்பெயரை ஏற்படுத்த மாட்டேன்' - இவ்வாறு அவர்களிடம் உறுதியாகவும், உறைக்கவும் கூறியதுண்டு.

இதனைக் கேள்வியுற்ற சுரேஷ் பெரேரா எனக்கு ஆலோசனை வழங்கினார். 'உமது நிலைப்பாடு நியாயமானது. எனக்கும் அதில் இணக்கப்பாடு உண்டு. ஆனால் நீதிமன்ற வளாகத்தில் தர்க்கம் என்று வந்தால், அதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். அத்தர்க்கம்தேவை அற்றது. உமது நிம்மதி கெடும். சில வேளைகளில் விபரீதங்களும் ஏற்படும். ஒரு சிரிப்பு மட்டுமே உமது எதிரொலியாக இருக்க வேண்டும்.' என்று கூறிய அவர் பின்வருமாறு கிண்டலும் செய்தார்.

'சாயி ஈடுபாடுள்ள உமக்கு இதுகூடத் தெரியாதா? சில நாள்களில் ஸ்ரீ சத்தியபாபா பற்றிய ஆங்கிலப் புத்தகம் ஒன்று தருகிறேன். வாசித்துப் பாரும்!'

என்னிலும் 21வயது குறைந்த சுரேஷ் அழுத்திக்கூறிய நடைமுறை சாத்தியமான, அதுவும் யதார்த்தமான அணுகுமுறை என்னை ஒரு கணம் திரும்பிப் பார்க்க வைத்தது.

முதியவர்களாகிய நாம் இளையோரின் அபிப்பிராயங்களை குறைவாக மதிக்கவோ, எடைபோடவோ, எடுத்த மாத்திரத்தே மறுக்கவோ கூடாதென்பதைப் புரிந்து கொண்டேன். திருவள்ளுவர் குறட்பாவை நினைத்துப் பார்த்தேன்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

'இவ்வாறு எதிர்ப்புகள் தோன்றினால் சிரிப்பே உங்கள் எதிரொலியாகட்டும்' - என்ற சுரேஷ் பெரேராவின் சிரிப்பு சற்று வித்தியாசமானது. அவரது சிரிப்பு எதிரியைக்கூடத் தன்வசப்படுத்திவிடும். சிரிப்பு அவரது ஆயுதம். அவரை நேரில் கண்டவர்களுக்கு அவர் சிரிப்பு எப்படியென்று தெரியும். அவரை நேரில் காணாதவர்கள் அவர் படத்தைப் பார்த்தால் போதும். அவர் சிரிப்பின் வலிமை புரியும்.


ஒருநாள் மலைப்பொழுது, ஐலண்ட் பத்திரிகை நிறுவனத்துக்கு உயர்நீதிமன்ற வழக்கு விசாரணைக் குறிப்புகளுடன் செய்தியெழுதி கொடுக்கச் சென்றபோது, அவர் என்னிடம் கூறினார்: 'வரதசுந்தரம்! வீடுபோகும் முன்னர் என்னைச் சந்திக்கவும்.' நான்அவ்வாறே அவரிருந்த மேசைக்குச் சென்றேன். அவர் ஆங்கிலப் புத்தகம் ஒன்றைக் கையளித்தார்.

அது கண்டதும் எனக்கோ ஒரே அதிர்ச்சி. அத்துடன் ஒரே மகிழ்ச்சி. அது பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபாபற்றி சாயிபக்தர் மொவெட் என்பார் ஆங்கிலத்தில் எழுதிய உலகளாவிய சாயி அன்பர்கள் புகழ்ந்தேத்தும் நூல். நான்நீண்ட நாள்களாக வாசிக்க விரும்பியும் எனக்குக் கிடைக்காத நூல். 'இது பகவான்பாபா சித்தம்' என்று என்மனம் உணர்த்தியது. இந்நூல் இன்றும் என்வசம் உள்ளது. அவர் காலமான பின்னர் அந்நூலைக் காணுந்தொறும், உணர்ச்சி பொங்குகிறது.

நீங்கள் சாயிபக்தரா என்று கேட்டேன். அவர் ஆங்கிலத்தில் மொழிந்த கூற்று பாபா போதனைகளின் சாரம் எனலாம்.

'நான் சாயிபாபா பக்தன் அல்லன். ஆனால், அவர் போதனைகள் இன, மத, மொழி, நாடு என்ற வேறுபாடுகளைக் கடந்து அனைத்துலக சமரசம் நாடுவது என்னைக் கவர்ந்துள்ளன. எனக்கு மிகவும் பிடித்த அவர் போதனை இதுதான்:

**'உலகில் சாதி ஒன்றே உண்டு!**
**அது மனித சாதி!**
**உலகில் சமயம் ஒன்றே உண்டு!**
**அது தெய்வீக அன்பு!**
**உலகில் மொழி ஒன்றே உண்டு!**
**அது உள்ளத்தின் மொழி!**
**தெய்வம் ஒன்றே உண்டு**
**அவர் எங்கும் நிறைந்துள்ளார்!**




சுரேஷ் தந்த பாபாபற்றிய நூல்

# பிக்கப் - டிப்பர் நேருக்கு நேர் மோதல்; கனகராயன்குளத்தில் இருவர் சாவு!



(வவுனியா நிருபர்)

வவுனியா, கனகராயன் குளம் பகுதியில் பிக்கப் வாகனமும் டிப்பரும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் மரணமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவில் இருந்து ஏ - 9 வீதி ஊடாக பயணித்த பிக்கப் வாகனமும் வவுனியா நோக்கிச் சென்ற டிப்பர் வாகனமும் கனகராயன்குளம் சந்திக்கு அண்மையில் கட்டுப்பாட்டை இழந்து நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் இருவர் மரணமடைந்துள்ளதுடன், இருவர் காயமடைந்துள்ளனர்.

மரணமடைந்த மற்றும் காயமடைந்தவர்கள் வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டி மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்த விபத்து குறித்து கனகராயன் குளம் போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (100)

# இந்திய இராணுவம் இலங்கைக்கு விஜயம்

இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு பற்றிய பேச்சு நடத்துவதற்காக இந்திய இராணுவத் தின் பிரதிநிதிகள் குழு இலங்கைக்குத் திடீர் விஜயம் மேற்கொண்டுள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர்தாதரகம் விடுத்துள்ள டுவிட்டர் செய்தியில் இந்த விடயம் கூறப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு ரீதியிலான பேச்சு, பயிற்சி முகாம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு பற்றிய விடயங்களுக்காக இந்தக் குழு விஜயம் செய்திருக்கின்றது எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனினும், தற்போது ஏற்ற இறக்கமாகக் காணப்படுகின்றது.'

- இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நேற்று (நேற்றுமுன்தினம்) மாலை 4 மணிக்குப் பிற்பாடு கிடைத்த தரவின் அடிப்படையிலே மொத்தமாக 248 நபர்கள் மேலதிக தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளார்கள்.

யாழ்.மாவட்டத்தில் மொத்தமாக 14 ஆயிரத்து 192 பேர் இதுவரை தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளார்கள். 281 இறப்புக்கள் இதுவரை பதிவாகியுள்ளன.

தொற்றாளர்களுடன் தொடர்புகொண்ட வகையில் 5 ஆயிரத்து 384 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தலில் உள்ளன. மருதங்கேணியில் 3 கிராமசேவகர் பிரிவுகளும், வேலணையில் ஒரு கிராமசேவகர் பிரிவுமாக 4 கிராமங்கள் தற்போது முடக்கத்தில் உள்ளன.

தற்போது தடுப்பூசி வழங்கும் வேலைத் திட்டமானது தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

60 வயதுக்கு மேற்பட்டோர் தடுப்பூசி பெறுவதில் தயக்கம் காட்டுகின்றனர் எனத் தகவல்கள் வெளிவந்துள்ளன. 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் இறப்புகளும் அதிகரித்த வண்ணம் உள்ளன.

எனவே, பொதுமக்கள் தடுப்பூசி போடுவதற்குத் தயக்கம் காட்டாது தங்களுக்குரிய தடுப்பூசியைப் போடுவதன் மூலம் இறப்புகளில் இருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

அத்தோடு அடுத்தகட்டமாக 20 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் வேலைத் திட்டத்தை விரைவாக ஆரம்பிக்க எண்ணியுள்ளோம்.

பொது முடக்கத்திலும் பொதுமக்கள் கட்டுப்பாடுகளை அனுசரித்து நடந்துகொள்ளாமை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. எனவே, பொதுமக்கள் தற்போதுள்ள பொது முடக்கத்தைத் துஷ்பிரயோகம் செய்யாது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி செயற்படுவதன் மூலம் இறப்புகளில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். அவசியமற்று வீதிகளில் நடமாடாது வீடுகளில் இருத்தல் சிறந்தது என்றார்.

## பேராயர் வத்திக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தப் பின்னணியிலேயே பாப்பரசர் - மஹிந்த சந்திப்பு இடம்பெறாது என அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

கொழும்பு பேராயர் இல்லத்திலிருந்து வத்திக்கானுக்கு வழங்கப்பட்ட கடும் அழுத்தம் காரணமாக இந்தச் சந்திப்பு தவிர்க்கப்பட்டிருக்கக் கூடும் என்று மற்றுமொரு தகவல் தெரிவித்தது.

இதேவேளை, இத்தாலி பயணத்தின் போது திருத்தந்தை பாப்பாண்டவரை தரிசிப்பதற்காக வத்திக்கானுக்கு விஜயம் செய்வதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எந்தக் கோரிக்கையையும் முன்வைக்கவில்லை அல்லது பிரதமருக்கு எந்தவித அழைப்பும் விடுக்கப்படவில்லை என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு நேற்றிரவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள தாவது:-

இத்தாலி பிரதமர் மற்றும் இத்தாலி மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த முக்கியஸ்தர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சர்வதேச நிகழ்வொன்றில் பங்கேற்பதற்காக பிரதமரும் வெளிவிவகார அமைச்சரும் விரைவில் இத்தாலியின் பொலோக்னாவுக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

செப்டெம்பர் 06ஆந் திகதி திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், திட்டமிடப்பட்டுள்ள இந்த விஜயத்தின் நோக்கத்தை வெளிவிவகார அமைச்சர் தெளிவாக விவரித்தார்.

ஐரோப்பாவின் பழமையான கற்றல் தளமான பொலோக்னா பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் சர்வதேசக் கருத்தரங்கின் தொடக்க அமர்வில் இலங்கைப் பிரதமர் சிறப்புரை ஆற்றவுள்ளார்.

எந்த நிலையிலும், திருத்தந்தை பாப்பாண்டவரை தரிசிப்பதற்காக வத்திக்கானுக்கு விஜயம் செய்வதற்குப் பிரதமர் எந்தக் கோரிக்கையையும் முன்வைக்கவில்லை அல்லது பிரதமருக்கு எந்தவித அழைப்பும் விடுக்கப்படவில்லை.

பொலோக்னாவில் நிகழ்வுகள் நிறைவடைந்ததன் பின்னர், பிரதமரும் வெளிவிவகார அமைச்சரும் இத்தாலியை விட்டு வெளியேறுவார்கள் - என்றுள்ளது.

# வவு. விபத்தில் மரணமடைந்த இளைஞருக்குக் கொரோனா!





(வவுனியா நிருபர்)

வவுனியா, ஈரப்பெரியகுளம் விபத்தில் மரணமடைந்த 28 வயது இளைஞருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் கடற்படை பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் 28 வயதான இளைஞர் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை மரணமடைந்திருந்தார்.

குறித்த இளைஞரின் சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அதன் முடிவுகளின் பிரகாரம் அவருக்குக் கொரோனாத் தொற்று பீடித்துள்ளமை உறுதிப்படுத்தப் பட்டது.

இதையடுத்து அவரது சடலத்தினை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்யும் செயற்பாட்டை சுகாதாரத் தரப்பினர் முன்னெடுத்து வருகின்றனர். (100)

# வைரஸ் திரிவுகள் பரவுவதால் கர்ப்பமடைவதைத் தாமதப்படுத்த மருத்துவ நிபுணர்கள் கோரிக்கை

கொரோனா, டெல்டா வைரஸ் திரிவுகள் பரவுவதால் பெண்கள் தாங்கள் கர்ப்பம் தரிப்பதை ஒரு வருடம் தாமதப்படுத்துமாறு சுகாதாரப் பிரிவுகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

டெல்டா திரிவு பரவுவதால், தாய் மற்றும் புதிதாகப் பிறக்கும் குழந்தைகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று மகளிர் மருத்துவ நிபுணர் மருத்துவர் ஹர்ஷா அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

# வவுனியா வைத்தியசாலையில் தேங்கிக் கிடக்கும் 20 சடலங்கள்

## மாவட்டத்தில் கொரோனா கோரத்தாண்டவம்

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் 20 கொரோனா சடலங்கள் தேங்கியுள்ளன என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுப் பரவல் அதிகரித்துள்ளதுடன், இறப்புக்களும் அதிகரித்து வருகின்றன. தொற்று காரணமாக மரணமடைபவர்களின் உடல்கள் சுகாதார நடைமுறைகளுடன் வவுனியா - பூந்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள மின் மயானத்திலேயே தகனம் செய்யப்பட்டுவருகின்றன.

குறித்த மின் மயானத்தில் நாள் ஒன்றுக்கு 6 சடலங்களையே தகனம் செய்யக் கூடியதாகவுள்ளது. ஆனால், தற்போது வவுனியாவில் இறப்புக்கள் அதிகரித்து வருவதால் சடலங்களை உடனடியாகத் தகனம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த இரு தினங்களில் மரணமடைந்த 20 பேரின் சடலங்கள் தற்போது தகனம் செய்யப் படாத நிலையில் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

குறித்த சடலங்களை முழுமையாகத் தகனம் செய்ய மூன்று தினங்கள் தேவையாகவுள்ள நிலையில் தொடர்ந்தும் இறப்புக்கள் ஏற்பட்டால் தகனம் செய்வதில் மேலும் நெருக்கடி நிலை ஏற்படும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மாவட்டத்தின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு ஒவ்வொருவரும் சமூகப் பொறுப்புடன் தொற்றில் இருந்து விடுபட சுகாதாரத் தரப்பினரின் ஆலோசனைகளைப் பின்பற்றுவதுடன், அரசினதும், சுகாதாரப் பிரிவினரதும் கொரோனா ஒழிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர்.

## உண்மைகளை மூடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாப்பரசரையும் ஏமாற்ற முயற்சிக்கின்றது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான உண்மைகள் வெளிவரும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் இரண்டரை வருடங்களாகப் பொறுமையாகக் காத்திருக்கின்றனர்.

ஆனால், அரசு விசாரணைகளை மூடி மறைக்க முயற்சிக்கின்றது. நீதியை நிலைநாட்ட அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. இது தொடர்பில் நாம் வத்திக்கானுக்கும் சர்வதேசத்துக்கும் அறிவித்துள்ளோம்.

முதுகெலும்பு உள்ளவர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக ஒழிந்துகொண்டு சர்வதேசத்துக்குச் செல்ல மாட்டார்கள்.

இதனால், இந்த இடத்தில் சர்வதேசத்துக்குச் செல்வது குறைந்த மதிப்புள்ள வேலையாகும். இங்குள்ள மக்களுக்கு இங்குள்ள சட்டத்தின் மூலம் நீதியை - தீர்வை வழங்க முடியும்.

ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்தின் பின்னால் சூழ்ச்சிகள் உள்ளன என்று கூறப்படுகின்றன. அது தொடர்பில் ஆராயப்பட வேண்டும் - என்றார்.

# மொழி ஆளுமை, சமூகம் மீதான அதீத அக்கறை கொண்டவர் மொழிபெயர்ப்பாளர் பஞ்சரட்ணம் ஐயா

## நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் இரங்கல்



தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆஸ்தான மொழிபெயர்ப்பாளரான திருவாளர் வேலுப்பிள்ளை குமார் பஞ்சரட்ணம் ஐயா தனது 85 ஆவது வயதில் காலமாகிவிட்ட செய்தி எல்லோரையும் போலவே எனக்கும் ஆழ்ந்த துயரை ஏற்படுத்தியுள்ளது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்.

அமரர் பஞ்சரட்ணத்தின் மறைவுக்கு ஊடகங்களுக்கு வழங்கிய அஞ்சலி செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

மிகச்சிறந்த மொழி ஆளுமையும், சமூகம் மீதான அதீத அக்கறையும் கொண்ட அவருடன் தனிப்பட்ட ரீதியில் பழகிய நாள்கள் பசுமையானவை. தபால் அதிபராக இருந்து செவ்வனே தன் பணிகளை ஆற்றி ஓய்வு பெற்ற அவர், தன் பணி ஓய்வின் பின்னர் தான் சார்ந்த இனத்தின் மீட்சிக்காகப் போராடிய தனிப்பெரும் இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆஸ்தான் மொழிபெயர்ப்பாளராக, சமாதான முயற்சிகளின் பங்காளனாக, போராளிகளுக்கு சிறந்த ஆங்கில ஆசானாக தனது பணியை ஓயாது தொடர்ந்தவர்.

இறுதிப்போரின் பின்னரான கடந்த ஒரு தசாப்த காலமாக, போரின் வடுக்களைத்தாங்கி, பொருளாதார நெருக்கடியால் கல்வியைத் தொடரமுடியாது தவித்த எத்தனையோ மாணவர்களுக்கு, தனதும் தனது நண்பர்களின் ஆதரவோடும் கல்விக்கான மாதாந்த உதவிகளை வழங்கி அந்த மாணவர்களின் கல்விப் பயணத்துக்கு உதவி புரிந்த வண்ணமே இருந்தார்.

பஞ்சரட்ணம் என்ற தனது இயற்பெயரைக் கடந்து ஜோர்ஜ் மாஸ்டராகவே எம் எல்லோரது மனங்களிலும் நிறைந்திருக்கும் இவரது செயற்பாடுகள் எனக்கு ஆச்சரியமளிப்பதாகவும் மானிட வாழ்வு தொடர்பான சிந்தனையை தூண்டுவதாகவும் அமைந்திருந்தன.

உதாரணமாக ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறேன். ஒருநாள் தனது மருத்துவ தேவைக்காக பண்ணை வைத்தியசாலைக்குச் சென்றவர் அங்கே காசநோயால் பாதிக்கப்பட்ட ஒரு பெண்மணியை கண்டு விசாரித்ததில் வடலியடைப்பைச் சேர்ந்த கணவனை இழந்த அப்பெண்மணி மிகவும் வறுமைப்பட்டவர் என்பதையும், வறுமையால் அவரது இரு குழந்தைகள் பாடசாலைக்குக் கிரமமாகச் செல்வதில்லை என்பதையும் அறிந்து, தனது நோயுற்ற நிலைமையையும் பொருட்படுத்தாது பருத்தித்துறையிலுள்ள தனது வதிவிடத்துக்கு வந்து தேவையான கோரிக்கை கடிதங்களை தயாரித்து, தானே நேரடியாக வடலியடைப்பிலுள்ள அந்தப் பெண்ணின் வீட்டுக்குச் சென்று தேவையான ஆவணங்களையும் கையொப்பத்தையும் பெற்று அப்போது சமூக சேவை அமைச்சின் செயலாளராக இருந்த திருமதி இமெல்டா சுகுமார் அம்மையாருடன் தொடர்புகொண்டும் அப்போதைய ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் எழிலரசி அம்மையாரை நேரடியாக சந்தித்தும்



உடனடியாகவே குறித்த பெண்மணிக்கு ஒரு தொகைப் பணமும் பின்னர் மாதாந்த உதவு தொகையும் கிடைக்க வழி ஏற்படுத்தியிருந்தார்.

இத்தகு கருணையும், காருண்யமும் நிறைந்த மனப்பாங்குள்ள மனிதர்களை இன்றைய சமூகத்தில் காண்பது அரிது. தான் இப்பூவுலகில் வாழ்ந்த காலம் முழுமைக்கும் தன்னாலான அரசியல், சமூக, கல்வி, மனிதநேயப் பணிகளை மானசீகமாக ஆற்றி, எம் எல்லோரது வாழ்வுக்கும் முன்னுதாரணமானவராக இருந்து, இறையடியில் இணைந்துகொண்ட ஐயாவின் ஆத்மா அமைதிபெற நாமும் பிரார்த்திக்கிறோம். - என்றுள்ளது.

# வயோதிபப் பெண் எரித்துக் கொலை

## நீர்கொழும்பில் பயங்கரம்

*நீர்கொழும்பு - தளுபன பகுதியில் பெண் ஒருவர் எரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.*

*தீக்காயங்களுடன் வீடொன்றில் பெண் ஒருவரின் சடலம் காணப்படுகின்றது எனப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் 89 வயதுடைய குறித்த பெண்ணை மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துள்ளமை தெரியவந்துள்ளது.*

*சம்பவம் தொடர்பில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவித்த நீர்கொழும்பு பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

# தமிழ் ஊடகத்துறையின் .....

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்தரப்பினர் எல்லோருக்கும் எனது பதில் ஒன்றுதான். பத்திரிகை ஆசிரியர் என்ற முறையில் எனது பத்திரிகையில் வெளியான ஒவ்வொரு வரிக்கும் நானே பொறுப்பு; நான் மட்டுமே பொறுப்பு - என்பதுதான்.

எனக்குக் கீழ் பணியாற்றிய பலநூறு செய்தியாளர்களை நீங்கள் கேட்டுப் பார்க்கலாம். எந்தச் சந்தர்ப்பத்திலும் எனது செய்தியாளர்களையோ, ஆசிரிய பீட சகாக்களையோ நான் காட்டிக்கொடுத்தவனல்லன். எல்லாச் செய்திகளுக்கும் தார்மீக அடிப்படையில் நானே பொறுப்பேற்று அத்தனை நெருக்கடிகளுக்கும் சளைக்காது நானே முகம்கொடுத்து வந்திருக்கிறேன். இந்த இருபத்தியைந்து வருடயுத்த கால பத்திரிகை ஆசிரியப் பணியில் எனது நெஞ்சறிய என் ஊழியர்கள் யாரையும் நான் காட்டிக் கொடுக்கவேயில்லை என்று நெஞ்சுரத்துடன் - உறுதிபட - கூறுவேன். அதனால் வந்த ஆபத்தின் விளைவுகளை ஏற்க நான் தயங்கியவனும் அல்லன்.

எமது பத்திரிகையில் எந்தச் செய்தி வந்தாலும் 'செல்லும் செல்லாததற்கெல்லாம்செட்டியாரே பொறுப்பு' என்ற மாதிரி வித்தியாதரனே அவை எல்லாவற்றுக்கும் பொறுப்பு என்று எல்லோரும் கருதும் ஒரு நிலைமையையே நான் பேணினேன். 'எங்கள் ஆசிரியர் என்ன நெருக்கடி வந்தாலும் எங்களைக் காட்டிக் கொடுக்காமல் தாமே அவற்றை எதிர்கொள்வார். எங்களுக்குக் காப்பரணாக இருப்பார்' - என்ற நம்பிக்கையை எனது ஆசிரிய பீடத்தவர்கள் மத்தியில் நான் எப்போதும் வளர்த்துக் கொண்டேன். - என்று குறிப்பிட்டிருந்தேன்.

இந்தக் கருத்தியல் எல்லாம் தினபதியில் - சிவநாயகம் ஐயாவுக்குப் பக்கத்தில் - இருந்து நான் கண்டறிந்து பெற்றுக் கொண்டவையால் வந்தவை. சிவநாயகம் ஐயாவின் ஆளுமையால் எனக்குள் ஏற்பட்டவை.

(வளரும்.....)

# வன்னி ஹோப் நிறுவனத்தினால் ஸ்மார்ட் போன் வழங்கி வைப்பு





ஆஸ்திரேலியாவில் இயங்கி வரும் தொண்டு நிறுவனமான வன்னி ஹோப் நிறுவனத்தின் அனுசரணையில் மலையக சமூக அபிவிருத்தி நிறுவனத்தால் டிஜிற்றல் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் வறிய மாணவர்களுக்கு மூன்றாம் கட்டமாக ஸ்மாட் போன் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கோட்டக் கல்வி பணிமனையில் வைத்து உதவிக் கல்விப் பணிப்பாளரும் வன்னி ஹோப் நிறுவனத்தின் கல்வி மேம்பாட்டு மூத்த ஆலோசகருமான பீ.என்.சுதர்சன் தலைமையில் இடம்பெற்றது.

நவீன கற்றல் வசதிகளை கிராமப்புற மாணவர்களுக்கு வழங்கும் நோக்குடன் வன்னி ஹோப் நிறுவனம் பல கல்வி சார் செயற்றிட்டங்களை வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பிரதேசங்களில் மேற்கொண்டு வருகின்றது. வன்னி ஹோப் நிறுவனத்தின் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மூன்றாம் கட்டமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமாராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட கட்டைக்காடு றோமன் கத்தோலிக்கத் தமிழ் கலவன் பாடசாலை மற்றும் ஆழியவளை கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தர வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களுக்கே இந்த ஸ்மார்ட் போன் வசதிகள் வழங்கப்பட்டன.

கொவிட் பாதுகாப்பு சுகாதார வழிகாட்டலுக்கு அமைய நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன், விசேட அதிதிகளாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சத்தியபாலன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி) தெய்வேந்திரா, வன்னி ஹோப் நிறுவனத்தின் கல்வி அபிவிருத்தி திட்டத்திற்கான ஒருங்கிணைப்பாளர் தேவரஞ்சன் உட்பட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் ஆணைக்குழு பொலிஸ்மா அதிபருக்கு வரையறைகளை சுட்டிக்காட்டி விளக்கக் கடிதம்

அமைதியாகவும், ஜனநாயக ரீதியாகவும் செயல்படும் அரசியல் கட்சியின் சட்டத்தை பொலிஸ் தடுக்கவோ அல்லது தவறாகவோ பயன் படுத்த முடியாது என்று குறிப்பிட்டு தேர்தல் ஆணைக்குழு பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

முன்னிலை சோசலிச கட்சியின் செயல்பாட்டாளர்கள் கைது செய்யப்படுகின்றனர் எனவும், கட்சியின் அரசியல் நடவடிக்கைகளுக்கு பொலிஸ் துறை அடிக்கடி இடையூறு விளைவிப்பதாகவும் சமீபத்தில் கட்சியினரால் தேர்தல் ஆணையகத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டது.

அதற்கு பதிலளிக்கும் வகையிலேயே தேர்தல் ஆணைக்குழு பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவுக்கு இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளது.

முறைப்பாட்டுக்கு பதிலளிக்கும் விதமாக ஓர் அரசியல் கட்சி, அரசியல் நடவடிக்கைகளை அமைதியாகவும் ஜனநாயக ரீதியாகவும் நடத்த அரசமைப்பு அனுமதிக்கிறது என்றும் தேர்தல் ஆணைக்குழு கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேநேரம் அந்தக் கடித்தில் ஓர் அரசியல் கட்சியால் அரசாங்கத்தை விமர்சிப்பதற்கு எந்தத் தடை உத்தரவும் இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.09.2021 இல் வெளியிடப்பெற்றது.